திராவிடநாடு

4—1—59 | வார வெளியீடு | விலை 16 காசு

கவியே பல புனைவாய்!

[வண்ணம்]

இலையேஇனி இருளேஎன
உலகேஒளி பெறவே
கலையேதிகழ் தமிழேசுவை
பெறவேகவி புனைவாய்!

அறமேமிக மறமேயற
மதியேபெற மகிழ்வால்
சிறந்தேதுயர் அழித்தேகளி
சுரும்பாய்கவி புனைவாய்!

உடலேவளர்; உரமேபெறு
உயிரேசுவை பெறவே
கடலேநிகர் தமிழாஇனி
மடியாக்கவி புனைவாய்!

அணுவால்நலம் அழிப்பார்மன
இருளேஇனி ஒழித்தே
அணுவால்நலம் விளைப்போம்புவி
அழியாக்கவி புனைவாய்!

மனமேஅகல் மதியேதிரி
குறளேஒளிச் சுடராம்
புனைந்தேஅறம் செழித்தேஇருள்
அழித்தேகவி புனைவாய்!!

யார் ஆண்டால் என்ன?

—[முகவைத் தமிழரசன்]—

வாய்மையும் தூய்மையும் ஒரு நாட்டில்வழக்கொழிந்துபோகிறது என்றால், அதற்கு அங்குள்ள மக்களின் அலட்சிய மனப்பான்மைதான் காரணமாக இருக்க வேண்டும். எந்தக் கருத்தையுமே கட்டாயப் படுத்தினாலும்கூட தெரிந்துகொள்ள வேண்டாம் — என்று ஏற்படுகின்ற அலட்சிய மனப்போக்கு—பெருமைபடைத்த ஒரு நாட்டில் வளர்ந்து நிற்கும் முன்னேற்றத்தை வெட்டிச் சாய்க்கும் கோடரி என்பதை அறிவு சால்புடையோர் எவராலும் மறுக்க முடியாது!

இந்த நாட்டில் சாதியை உண்டாக்கினர்கள்--மதத்தைப் பரப்பினர்கள — தெரிந்திருக்கிறோம்! சாதி இந்த நாட்டு மக்களுக்கு ஆக்கிவைத்த நீதியென்ன? மதத்தால் மக்கள் அடைந்த பயன் யாது? அறியாமலில்லை நாம்! மக்கள் உள்ளத்தையும், உடலையும் குறுக்கிமாடுகளைவிடக்கேவலமாய் ஆக்கப்பட்ட கொடுமையிலிருந்து சாதிசாதித்த நீதியைத் தெரிந்திருக்கிறோம். மிருகங்களாய் மாறி ஒருவரைஒருவர் தாக்கிக்கொண்டு செத்தனர்? மதம் தந்த மயக்கத்தால் என்பதும் தெரிந்ததுதான்; என்றாலும்கூட இவைகளை ஒழித்துக் கட்டிவிட விழித்தெழவில்லை நாம்!

தங்கக் கிண்ணத்திலே ஊற்றித் தந்தால்கூட நஞ்சைப் பருகிட மாட்டோம். அதுபோலவே, தீய செயல்கள் எந்தத் துறையிலிருந்தாலும் அவற்றை ஆதரிக்க முடியாது! சாதியால் மட்டும் — மதத்தால் மட்டும் தீயசக்திகள் வலுப்பெறுகின்றன என்று சொல்வதற்கில்லை. அரசியல் துறையிலும் கூடத் தீயசக்திகள் பரவுகின்றன. மூன்று சக்திகளிடமிருந்து வேதனைக் கணைகள் நம்மைத் தாக்கினாலும் — நாம் வீறிட்டெழவில்லை. காரணம்? இந்த நாட்டில் பெரும்பான்மையினரிடையே ஏற்பட்டுப்போன அலட்சிய மனப்போக்குத்தான். யார் ஆண்டால் என்ன? நமக்கு வேண்டியது "சோறு" தானே!! என்று வயிற்றை மட்டும் நிரப்பிக் கொண்டு வாழ்க்கையை ஓட்டும் நிலை — இமயமென வளர்ந்துவிட்டது.

எதையுமே புரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இல்லாததால்தான் சாதி நம்மைச் சாக்கடையில் தள்ளிற்று! மதம் — மாடுகளாக்கிற்று!! அரசியல் — அடிமைகளாக்கி வைத்திருக்கிறது!!! போதாதா இந்த நிலை?

கலப்பையைப் பிடிக்கும் தொழிலாளி—அரசியலில் தலைமையேற்றிருக்கும் ஒருவனை, செங்கோலைக் கையில் ஏந்திடச்செய்து, ஆட்சிப் பீடத்தில் தூக்கிவைக்கும் எண்ணற்ற கைகளோடு தன்னுடைய கைகளும் கலந்தவைகள்தான் என்பதை உணரவேண்டும்! படித்தவன், பாமரன்—இந்த நாட்டில் வாழும் அனைவருமே—பொறுப்புள்ளவர்கள்! இல்லை என்று எவருமே அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிடக்கூடாது.

சமுதாய விழிப்பு முதலில் வேண்டும் நமது நாட்டுக்கு! சாதி மத உணர்வாம் சாக்கடை எண்ணங்களைத் துரத்தவேண்டும்! அதற்காக மூட எண்ணங்களை ஒழித்துவிட நடக்கிற போராட்டத்தில் கலந்துகொண்டு புரட்சி செய்துகொண்டிருக்க வேண்டுமென்பதல்ல! சாதியால், மதத்தால் — இன்னின்ன தீமைகள் விளைகின்றன—என்பதை மட்டும் தெரிந்துகொண்டால்—அது போதும்! பின் எந்தச் சமுதாயப் புரட்டர்களும் தங்கள் சூதாட்டச் செயலை மக்கள் மன்றத்தில் நடமாடவிடமுடியாது! 'அரசியலிலும் இதே முறைதான் கையாளப்பட வேண்டும்! இந்த நாட்டின் பெரும் பகுதியினரிடையே ஒரு எண்ணம் வளர்ந்திருக்கிறது! அது—ஒவ்வொரு இயக்கங்களைக் கட்டிக்காத்து வரும் தலைவர்களுக்கு — தொண்டர்களுக்கு மட்டுமே, அரசியல் "சொந்தம்"—தேவை—என்பது!! ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள் — நாம் உழைத்தால்தான் நமது வயிறு நிறையும். அப்படியிருக்க நமக்கெதற்கு அரசியலும் அதைப் பற்றிய நினைப்பும் என்று! அப்படியானால், உழைக்காமல் உண்ண முடிந்தால்தான் அரசியல் தேவையா? எவ்வளவு தவறான — தமிழ்ப் பண்புக்கே ஒவ்வாத முடிவு இது!!

எல்லோருமே நாட்டில் புரட்சி —போராட்டம் என்று வாழ்க்கையை அமைத்துக்கொள்வது தவறுதான்! அதற்காக அரசியலைத் தெரிந்துவைத்துக்கொள்வதும் தவறா? வசதிபடைத்தவர்கள் அரசியலில் பங்குகொண்டால்—வசதியில்லாதவர்கள் அரசியலைப்பற்றி நிச்சயமாகத் தெரிந்துவைத்திருக்கவேண்டும்.

தேர்தல் காலங்களில் நான் அதைச்செய்வேன்—இதைச் செய்வேன் — மக்களின் நலனே என் நலன்; என்றெல்லாம் பேசுகிற ஒருவர்; ஏதுமறியாதவர்களின் வாக்குகளால் வெற்றி பெற்றுச் சட்ட மன்றத்திற்குச் சென்றபின் —அந்தத் தொகுதிக்கே எட்டிப் பார்க்கமாட்டார்! அந்தத் தொகுதியின் நலனுக்காகச் சட்டமன்றத்தில் ஒருவார்த்தைகூடப்பேசமாட்டார்! பெருவெள்ளம் பாய்ந்து மக்களை வாரிச்சென்றாலும், புயல் சுழன்றடித்து அவர்தம் வாழ்வைச் சிதைத்தாலும் கூட—அந்தத் தொகுதி என்னவாயிற்று என்றுகூட ஓடிச்சென்று பார்க்கமாட்டார்கள்! வரிவரி என்றுகொட்டிக்

(16-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சிரங்காதா?

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [4-1-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 25

டில்லி ஏகாதிபத்தியத்தின் ஏகபோக அடிமைகள்தான் மாநில அரசுகள் என்று நாம் கூறும்போதெல்லாம், நம்மை நையாண்டி செய்வதில் நாவடக்கம் கட்ட முடிவதில்லை இங்குள்ள காங்கிரஸ் நண்பர்களால். மாறாக நம்மை நாவலிக்க நகையாடி மகிழ்வதே அவர்தம் வாடிக்கையாகிவிட்டது.

நல்லது எது? கெட்டது எது? வேண்டுவது எது? வேண்டாதது எது? பயனுள்ளது எது? பயனற்றது எது? என்று எதனையும் சிந்தித்துப் பார்க்க மறந்தும்—மறுத்தும் — மமதையோடு மாற்றாரை — எதிர்க்கட்சிகளை ஏசுவது ஒன்றே தங்கள் கட்சிக்குப் புலம்தேடும் வழி என்ற போக்கில் நடந்துகொள்கின்றனர்.

தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள்—இதனால் எதுவும் குடிமுழுகிப் போய்விடாது—இதனால் எந்த விதமான கெடுதலும் ஏற்பட்டுவிடாது — பயனற்றதென்று யாரும் கூறமாட்டார்கள்--தேவையற்றதென்று தெளிவில்லாதவர்கள் கூடக் கூறக் கூச்சப்படுவார்கள். அந்த அளவுக்குப் பொதுநலம் முழுக்க முழுக்க உள்ள ஒரு கோரிக்கையை எதிர்க்கட்சியினராகிய நாம் அதிகமாக வலியுறுத்துகிறோம் என்ற காரணத்தை வெட்கமின்றி வெளிப்படையாகவே கூறி மறுத்துவிட்டது மத்திய அரசுக்குப் பயந்து நடக்கும் மாநில அரசு.

சென்னை மாகாணம் என்றிருப்பதைத் தமிழ் நாடு என்று மாற்றுவதால், மாகாணி அளவுகூட நட்டம் ஏற்பட்டுவிடாது. மத்திய அரசுக்கும்சரி, மாநில அரசுக்கும்சரி இதனால் எந்த விதமான இழப்பும் ஏற்பட்டுவிடாது. என்றாலும், நாம் கேட்கிறோம்—எதிர்க்கட்சியினராகிய நாம் கேட்கிறோம்—குறிப்பாக "தி. மு. க.வினராகிய நீங்கள் கேட்கிறீர்கள்--எனவே சென்னையைத் தமிழ் நாடாக்கமாட்டோம்" என்று மதிக்கும் நிதிக்கும் தலைமை தாங்கும் தகைசால் சுப்பிரமணியம் அவர்கள் பச்சையாகவே கூறிவிட்டார்.

போகட்டும், ஏதோ பதவியில் இருக்கும் பற்றுக் காரணமாக நம்மைச் சாக்குக்காட்டித் தட்டிக்கழித்துவிட்டார் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்வோம்—

"இல்லாத பெயரைப் புதிதாக வைக்கச் சொல்கிறீர்கள்—ஏன் இந்த வேலை உங்களுக்கு' என்று டில்லி மிரட்டினால் என்ன செய்வதென்றஞ்சி ஒரு வேளை மறுத்திருக்கலாம்.

"சென்னை" என்பதுதான் புதிதேயொழிய "தமிழ்நாடு" என்பது ஒன்றும் புதிதல்ல என்பதை வரலாற்றை வகையாகப் படியாத காரணத்தால் மறுத்திருக்கலாம்.

ஆட்சியில் இருப்போருக்கு ஆராயுந்திறன் மிகுதியாக வேண்டும்—அவசரக்கோலம் கூடாதென்பார்கள். ஆனால் நமக்கு வாய்த்த அரசோ எதனையும் ஆராய்ந்து பார்த்து நிதானமாக முடிவுசெய்ய மறுக்கிறது. எடுத்தேன் — கவிழ்த்தேன் என்ற போக்கில் நடந்துகொள்கிறது.

சென்னை பழமையான பெயர், தமிழ்நாடு என்பதுதான் புதிதென்று கூறுவோம் என்று கூச்சமின்றிப் பேசும் புத்திசாலித்தனத்தைக் கண்டு நாம் பரிதாபப்படுவதைவிட வேறென்ன செய்ய முடியும்!

வானொலி! இது, இம்மாநிலத்தில் ஏற்பட்ட காலந்தொட்டு அழைக்கப்பட்டு வந்த ஒருஅருமையான தமிழ்ப்பெயர்.

இதனை இப்பொழுது சில காலமாக—எதற்கோ நாமறியோம் — "ஆகாஷ்வாணி" என்று மாற்றி அழைக்க ஆரம்பித்துவிட்டார்கள். வானொலி என்றிருந்த போது ஏற்பட்ட நட்டம் எவ்வளவு? அதனை ஆகாஷ்வாணி என்று மாற்றிய பிறகு உண்டான இலாபம் எவ்வளவு? வானொலியால் ஏற்பட்ட கெடுதல் என்ன? ஆகாஷ்வாணியால் உண்டான நன்மை என்ன? வானொலி எப்படி வேண்டப்படாத ஒன்றாயிற்று? ஆகாஷ்வாணி எங்ஙனம் தேவைப்படுவதாயிற்று? விளக்கம் தரவேண்டாமா வித்வப் பாரதியினர்!

வானொலி ஆகாஷ்வாணியாக மாறியதன் காரணமாக இதோ ஒரு உயிர் ஊசலாடிக்கொண்டி

ருக்கிறது. திருச்சி வானொலி நிலையத்தில் இளவழகன் என்னும் இளைஞன் கடந்த பத்து நாட்களுக்கு மேலாக உண்ணா நோன்பிருந்துவருகிறார்—ஆகாஷ்வாணி வானொலியாக மாறும்வரை வடக்கிருத்தலைக் கைவிடமாட்டேன் என்ற உறுதிபூண்டுள்ளார். திருச்சி மாவட்ட உதவித் தலைமை அதிகாரி கூடப் போய்ப் பார்த்து வந்ததாகச் செய்தி கூறுகின்றது. என்றபோதிலும் "நாங்கள் ஒன்றும் டில்லிக்கு அடிமை அல்ல" என்று எக்காளமிடும் நம்ம சர்க்கார் இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஒருவேளை, 'இது என்ன "இளவழகன்" என்று பெயர் இருக்கிறதே! இந்த ஆசாமியும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம்போலும்! எனவே, ஆகாஷ்வாணி வானொலியாக மாறாது—மாற்ற முடியாது' என்று நம்ம சர்க்கார் கூறுமாயின் அதனை ஒரு ஆச்சரிய நிகழ்ச்சியாகவோ, அதிர்ச்சயூட்டும் விஷயமாகவோ கொள்வதற்கில்லை — ஏனென்றால், நம்ம சர்க்கார் எந்த விஷயத்தையும் நடுநின்று பார்த்து முடிவு கூறும் வழக்கத்தைத்தான் மேற்கொள்வதில்லையே! கட்சி மனப்பான்மையோடு அரசை நடாத்திச் செல்லும் போக்கிலிருப்பவர்களுக்கு எந்த ஒரு பொதுவான காரியத்தை விளக்கிக் கூறி, அதற்குப் பரிகாரம் தேட முயல்வதானாலும், அது செவிடன் காதில் ஊதும் சங்குக்கொப்பாகுமேயொழிய, உருவான பலன் கிடைக்காது.

"உண்ணா நோன்பிருந்தாலென்ன? உயிர்தான் துறந்தால் என்ன? எங்கள் போக்கையும் நோக்கையும் நாங்கள் மாற்றிக்கொள்வதாக இல்லை" என்று ஒரு அரசு, அதிலும், ஜனநாயகம் என்ற போர்வையால் தன்னை மறைத்துக்கொண்டு உலவும் ஒரு அரசு கூறுமாயின், அதற்குக் காலம்தான் பாடம் கற்பிக்கவேண்டும்.

இருபதாவது ஆண்டை எட்டிப் பார்க்கும் ஒரு இளைஞன், தனது உயிரை ஒரு கொள்கைக்காகத் துறக்க முன்வந்துள்ள ஒரு அதிர்ச்சி தரும் — சரித்திரம் காணக்கூடிய நிகழ்ச்சியைச் சாதாரணமாக எண்ணி ஏனோதானோ என்று இருந்துவிடுவதா?

தலைக்கு எண்ணெய் தடவி, வாரி முடித்து "வாகைசூடி வருவாய் என் கண்மணியே" என்று வாழ்த்தி வழியனுப்பிவைத்த தாயின் தகைசால் பண்பைத் தமிழ் இலக்கியங்களில் கண்டோம்.

இதோ! இன்று இளவழகனின் தாயார் திருவாட்டி குப்பம்மாள் அவர்கள் பண்டைத் தமிழ்ப் பண்பு பட்டுப்போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். "தமிழுக்காக என் புதல்வனை இழக்கவும் தயாராக இருக்கிறேன்" என்று ஆணையிடுவதைக் கண்ட பின்னராவது, நமது பச்சைத் தமிழ்மகனாரின் நெஞ்சம் இளகாதா—இரங்காதா என்று எதிர்பார்த்துக்கிடக்கும் எண்ணற்ற தமிழ்ப் பெருமக்கள் வடிக்கும் கண்ணீர் நமக்குத் தெரிகிறது. ஆனால், நமக்குத் தெரிந்து என்ன பயன்? அவருக்கல்லவா தெரியவேண்டும்!!

★

பாதுகாப்பிலாகாவுக்கு
ரூ. 50 கோடி நஷ்டம்

மத்ய பாதுகாப்பிலாகாவிடம் உபரியாக உபயோகமற்றுக்கிடந்த சாமான்களை ஏலம் போட்டு விற்பனை செய்ததில், 50-கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது. கடந்த 4-ஆண்டுகளில் சராசரி ஆண்டிற்கு 125,000,000 ரூபாய் வீதம் நஷ்டமேற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட 4-ஆண்டுகளில் 662,400,000 ரூபாய்கள் பெறுமான சாமான்களைப் பாதுகாப்பிலாகா விற்பனைக்குவிட்டது. ஆனால் விற்பனை மூலம் கிடைத்தது என்னவோ 160,100,000 ரூபாய்தான்.

தற்போதைய தேவைக்கும் வருங்கால தேவைக்கும் அதிகமாகச் சாமான்கள் இருந்தால் "உபரியாக" இருக்கிறதென்று அறிவிக்கப்படுவது வழக்கம். தற்போது ஏலத்தில் விடப்பட்ட சாமான்களில் பெரும்பாலானவை கடந்த யுத்தகாலத்தைச் சேர்ந்தவை. சுதந்திரம் பெற்ற பின்னர் வாங்கப்பட்ட சாமான்களும் "உபரி" சாமான்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வறுமையின் பெருமை

புலமைக்கும் வறுமைக்கும் நடந்துவரும் போராட்டம் நெடுங்காலமாகவே இருந்துவருவதொன்றாகும். சங்கப் புலவர்களில் பலர் வறுமைக் கடலில் நீந்தியவர்கள்தாம். கூழுக்குப் பாடினார் ஒளவை; 'நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்றார் ஒரு புலவர்; குமணனை நாடினார் பெருந்தலைச் சாத்தனார்; செய்வதறியாது வாடினார் பெருஞ்சித்திரனார்.

இப்படித் தமிழ்ப் புலவர்கள் எல்லோருமே (பெரும்பாலும்) வறுமையால் வாடியவர்கள்தாமோ என்றால், 'ஆம்' என்பதைத்தான் அதற்கு பதிலாகப் பகரமுடியும்! நிலம் விட்டுக் கலம் ஏறி, நீர் கடந்து நம் நாடடைந்த போப் கூறுகிறார்: "வறுமையின் நீர்மையை உணரத் தமிழ்ப் புலவனாய்ப் போ" என்று!

வறுமை என்ற இவ்வார்த்தையைக் கேட்டாலே வெறுப்பாயிருக்கிறது நமக்கு. ஆனால் பண்டைப் புலவர்களுக்கோ அது விருப்பாயிருந்தது! வறுமை கொடுக்கும் துன்பம் அதிகம். ஏன்? வறுமையே துன்பம்! துன்பமே வறுமை! வறுமையால் நாமடையும் நற்பயன் யாதுளது?

குடிப்பெயரைக் கொல்லும் நல்குரவு நல்லதா? அல்லது ஒழுக்கத்தை ஒழிக்கும் வறுமை வேண்டற்பாலதா? வறுமை தரும் இன்னல்கள் சொல்லும் அளவினவோ? கல்வியைச் சிதைக்கும்! நாணத்தை நீக்கும்! அழகை அழிக்கும்! இதனால் அன்றோ,

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"

என்றார் குடபுலவியனார்!

ஆனால், இவ்வளவு துன்பம் கொடுக்கும் வறுமையும் நன்மையாகத் தோற்றுகிறது வள்ளுவருக்கு. அது ஒரு துலாக்கோலாம்! சுற்றத்தவரின் மெய்யுறவை அளக்க, நண்பர்களின் நீர்மையை எடைபோட!

"கேட்டினும் உண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்"

அழிவின் கண் அல்லலுழப்பதல்லவோ நட்பு? இடுக்கண் களைவதல்லவோ நட்பு? ஆகவே தன்னைச் சூழ்ந்துள்ள நண்பரை அளக்க வறுமை ஒரு துலாக்கோல். வறுமையால் நாம் பெறும் நலம் இவ்வளவினதோ? இல்லை— இன்னும் உளது!

வறுமை தினம் தினம் தமிழ்க் கலையை வளர்த்தது—இலக்கியத்தைத் தழைக்கச் செய்தது-பற்பல நீதிகளை நல்கி உதவி தந்தது. வளத்தின் நடுவே வளர்ந்த கலையினும், வறுமையின் நடுவே மலர்ந்த கலையே பெரும்பாலும் கலையுலகில் காணப்படுகின்றது.

பழனிவேலு

இல்லையா? ஆம். இன்மையின் இன்னாததாகிய அந்த இன்மைதான் புறநானூற்றின் சிலபல பகுதிகள் எழக் காரணமாய் நின்றது. பற்பல தனிப்பாடல்கள் எழ உதவி புரிந்தது!

சரி, இன்மை வந்துற்றது என்றால், அதை நீக்குவது தலைமகன் கடனல்லவா? வறுமை வாய்ப்பட்டவனை அவன மனைவிகூட மதிக்கமாட்டாளே! ஆகவேதான் தலைமகன் வறுமையை நீக்குவான் வேண்டிப் பல தொல்லைகளை மேற்கொள்ள வேண்டியவன் ஆகின்றான். "பாசம் பசிப்ப மடிமைக் கொளல்" கொடுமை என்று திரிகடுகனார் தீர்ப்பளித்து விட்டாரே! பிறகு நாமென்ன சொல்லுவதற்கு இருக்கிறது? வறுமை கண்ணுற்றபோது தன் குடும்பமே அன்றி, சுற்றத்தினரையும் பாதுகாத்தால் ஒருவனைப் புகழ்வர் எல்லோரும். ஆயின் ஒவ்வொரு பெரிய சுற்றத்தையும் தன் உறுப்பாகப் பெற்றுள்ள அரசு? அதன் தலைவன்? ஆம்! அத்தலைவன் கூடக் குடிகளின் பசியைப் போக்கினவனாயின் பெருமைப்படுத்தப் படுகின்றான். "உண்டாயின் பதங் கொடுத்து இல்லாயின் உடன் உண்ணும் இல்லோ ரொக்கற் றலைவ"னாய் இருந்ததால்தானே அதியனைத் தொண்டைமான் எதிரே புகழ்ந்தாள் ஒளவை!

வறுமை உயிரைமட்டுமா வாட்டுகிறது? அறிவையும் அல்லவா அழிக்கப்பார்க்கிறது! உணவு கிடைக்காவிட்டால் கவலையில்லை. வாய்க்குணவின்றேல் செவிக்குணவு இருக்கிறது. ஆனால் உயிரோடிருந்து செவிக்குணவு பெற, வாய்க்கும் சிறிது ஈயப்பட வேண்டுமல்லவா? அந்தச் சிறிதளவு உணவுகூட அகப்படவில்லையெனில் என்ன செய்வது? புரவலனைத்தானே நாடிச் செல்ல வேண்டும்? இதைத் தவிர வேறு வழி இல்லையா என்றால், உள்ளது! ஆனால், கலைச் செல்வர்கள் செல்லக் கூடாத கிளைவழி அது!

தன் வீட்டு நிலையைத் தெள்ளிதின் உணர்த்திப் பொருள் பெற அரசனிடம் ஏக வேண்டாமா? ஆகையால்தான் குமணனை நாடினார் பெருந்தலைச் சாத்தனார்.

எந்த ஒரு பொருளும் உபயோகத்திலிருந்தால்தானே காய்ந்தால்கூடப் புத்தம் புதியனவாக இருக்கும்? நெடு நாட்களாக உபயோகப்படுத்தப்பட்டு இராவிடில் ......வாளாயிருந்தால் துருப்பட்டிருக்கும்.........தாளாயிருந்தால் நைந்திருக்கும்....,...கல்வியாயிருந்தால் கவனத்தைவிட்டு விலகி இருக்கும். இயற்கையின் பணியினை மாற்றவல்லாரும் உளரோ?

அதே கதைதான் சாத்தனார் வீட்டு அடுப்படியிலும். அடுப்புக் குமிழ்கள் இருக்கின்றனவே, ஆயுத எழுத்தைப்போல மூன்று. அவை தேயாமல் உயர்ந்தே இருந்தனவாம்! பாவம் பொங்கி எத்தனை நாளாயிற்றோ! அதுதான் ஒழியட்டும். வெப்பம் இல்லாமல் தப்பமாக இருந்ததால் காளான்கள் அடுப்பாகிய சிறிய அறையின் கண்ணே குடிபுகுந்தனவாம். வறுமைக்கு அறிவு உண்டோ? இல்லையே! குழந்தைகள், பெரியோர் என்ற ஈரம் இல்லாயிற்று அதனிடம். குழந்தை பசியால் அழுதது! தாயின் ஒட்டிய மார்மைச் சுவைத்தது பாவம்! குழவி கண்ணீர்வடித்தது! பன்னீர் படவேண்டிய கண்களில் கண்ணீர் தோய்ந்தது! அச்செல்வத்தைப் பெற்ற செல்வத்தால் அந்த அவல நாடகத்தைத் தாங்க முடியவில்லை. "கிளிசரின்" இல்லாமலேயே கண்ணீர் வடித்தாள் சாத்தனாரின் நாயகி! அவள் அவரை நோக்கினாள். காதல் நோக்கா? அல்ல! ஏக்க நோக்கு!

இந்த அவல வாழ்வு தமிழ்ச் செல்வர் சாத்தனாருக்கே உரியது!

இம்மட்டோ! இல்லை. உங்களை இன்னும் கொடுமை உலகுக்கு அழைத்துச் செல்கிறேன், வாருங்கள்!

தமிழ்ப்புலவர் ஒருவரின் வீட்டிற்குச் செல்வோமா? விருந்தினரை வரவேற்காமல் தள்ளிவிடுவாரா அவர்? தள்ளமாட்டார். மாறாக உள்ளே அழைப்பார் உண்ண! சாப்பாடு பிரமாதமாக இருக்கும் என்று எண்ணினீர்களோ, உங்கள் கற்பனைத் திறனுக்குச் சோதனைதான்! அறுசுவை மூன்றுவகை உணவுஉண்ணலாம் என்று எதிர்பார்க்காதீர்களோ, உங்களுக்குக் கொடுக்கப்போவது வெறும் கீரை — வேக வைத்தது தான்—உப்பில்லாமல் — குப்பைமேனிக் கீரை சாப்பிடுவீர்களோ இல்லையோ! அதுவும் கொழுந்து! — ஆமாம்! வறுமை வாழும் வீடுகளுள் ஒன்றுதான் அது. மொஹஞ்சதாரோ தூண்களை ஒக்கும் தூண்கள், குட்சிச் சுவர்கள், உள்ளே சென்றால் கண்களுக்கு விருந்தளியா நிற்கும்! ஒரு வீட்டின் செல்வநிலை அவ்வீட்டின் அடுப்படியைப் பார்த்தவுடனே தெரிந்திடும் அல்லவா பெரும்பாலும்! இவ்வீட்டில்கூடச் சமையலறையில் நிரந்தரமாக வாழுகின்றனர் நிரைநிரையாகப் பலர். பெயரைச் சொல்லட்டுமா? திருவாளர்கள் காளானும், வௌவாலும் தான்! வேறு யாரும் இல்லை! அறையின் நாற்புறமும் மெல்லிய பட்டுத்திரைகள் தொங்கிக்கொண்டிருக்கும். அது ஒட்டடையாக உங்கள் கண்களுக்குக் காட்சியளித்தால் அது என் குற்றமில்லை! அவ்வளவு செல்வங்கொழிக்கும் வீடு அது!

இவ்வாறு கொடுமை என்ற ஒன்றை இம்மையிலேயே கண்டோர் போக பூமியைப் பாராதவரா? இல்லை, பார்த்தனர். அனுபவித்தனர்கூட!

''நீறு மணக்கும் நெற்றியெலாம்
வாச மணக்கும் வீதியெலாம்''

—ஆமாம் பாட்டுத்தான்.

தெருவெல்லாம் சந்தனக் குழம்பு! அழகழகான கோலங்கள்! சுண்ணாம்பால் அல்ல; தானிய மாவினால்! கோழி பொறுக்க வந்தது நெல்லை! நீள்விழி வீசியது கல்லை. ஒரு யானை படுத்தவிடம் ஏழு யானைக்கு உணவு கொடுத்தது!

அம்மட்டோ! இல்லை. மக்கள் இடையெல்லாம் விதவிதமான ஆடைகள்! பாம்புத் தோல் போன்ற பட்டுப் புடைவைகள், பாலாவி போன்ற பாவாடைகள்! இழை செல்லுவது தெரியாத நல்லாடைகள்! பூத்தொழில் முற்றுப்பெற்ற பூவாடைகள்! இப்படி எல்லாம் ஆடைகள் நெய்தனராம். உடுத்திக் களித்தனராம். இன்பம் கண்டனராம். கூறுகின்றன புறம், பாணிரண்டு, மலைபடுகடாம், பொருநராற்றுப்படை.

தமிழரின் நெய்யும் திறனைக் குறித்து ஒரு கதை வழங்குகிறது! "தமிழ் நாட்டுத் துணிகளின் பெருமையினை உணர்ந்த ஔரங்கசீப் நிறைய ஆடைகளை வாங்கித் தன் மகளுக்குக் கொடுத்தான்! அவளைப் புடைவை கட்டிய கோலத்தோடு பார்க்க ஆசைப்பட்டான்! அதன்படி அவள் தோழியருள் ஒருத்தி அரசனை இட்டுச் சென்று அவன் மகள் இருந்த அறையினுள் கொண்டுவிட்டாள். உள்ளே சென்றவன் மின் விசையால் தாக்குண்டவன்போல் வெளியே வந்து தோழியை "அடிமையே! என் மகளின் பிறந்த கோலத்தைக் காணவா இங்கே வந்தேன்?'' என்று கண்கள் சிவக்கக் கேட்டான்'' இதற்குள் உள்ளிருந்த மன்னன் மகள் பேசினாள்; 'புடவை கட்டிக்கொண்டுதானுள்ளேனப்பா. ஐந்து புடவைகள்!' என்றாள்! இப்பொழுது ஆலைகளில் உண்டாகும் வெங்காயச் சருகு சேலைகளை அதன் காலில் அல்லவாகட்டி அடிக்கவேண்டும்? (அன்று தமிழன் புடவையை அடக்கினான் சிறு கூண்டுக்குள். இன்று அவனை அடக்கிவிட்டான் மார்வாடியின் வட்டிக்குள்.)

இவ்வளவுதானா? இல்லை. இன்னமும் உண்டு. "நீள்மதில்கள்'' எப்படிப்பட்ட மதில்கள்? உயர்ந்த மதில்கள்! பூமியின் கீழேயும் பல்லடி ஆழம், மேலேயும் பல்லடி உயரம்! "அழகுக்கு இலக்கணங்களாக அற்புத மாடங்கள்'' "உண்டார் மயங்கும் கள்ளை வடிக்கும் கனக மாடங்கள்'' "வெள்ளம்போல் மக்கள் செல்லும் அகன்ற நேரான தெருக்கள்'' 'ஓவியர் கைக்கடங்காச் சிறு கடைக் காட்சிகள்'' "தெருக்களின் மருங்கினில் நிழல் தரு மரங்கள், செடிகள்'' இன்ன பிற—இவ்வளவும சாத்தனார், சித்திரனார் வாழ்ந்த தமிழகத்தில்தான்!

பொங்கல் வாழ்த்து
செல்வங்கள்

வாழ்த்து இதழ்களிலே கவர்ச்சிகரமான புதுமுறைத் தயாரிப்புகள், பிரபல ஓவியர் கொண்டையராஜு, ஈசுவரன், லிங்கேசன், ஆர்ட்ஸ்லெண்ட் ஆகியோரின் அற்புதமான, புதுமையான சித்திரங்கள் அமைந்த 20-விதவாழ்த்துக்கள். மிகக் குறைந்தவிலையில் மாதிரிப் பிரதிகளுக்கு ரூபாய் 2—25 அனுப்புக. எங்களிடம் '20X14' அளவில் தலைவர்களின் படக் காலண்டரும் கிடைக்கும். முழு விபரங்களுக்கு எழுதுக;—

மதுர நிலையம்,
29, சின்னதம்பி தெரு,
சென்னை-1.

இதுமட்டுமா? உணவைச் சுவைப்பதிலே சிறந்தவன் உலகிலேயே தமிழன் அல்லவா? ஆறு சுவையாம்! மூன்று வகையாம்! கனி இரசமாம்! கரும்புச்சாறும்! அம்மம்ம! வெறும் அரிசியிலேயே எத்தனை விதங்கள்! வெண்ணிறத்தில், "தயிரன்னம், பாலன்னம், நெய்யடிசில், வெண் பொங்கல்" என்று இத்தனை வகை. இன்னும் கிறகிறமான ஒன்பது வகைச் சோறுகள். என்னே தமிழனின் சுவைக்கும் தன்மை! இதை நோக்கும்போது, 'தமிழர்கள் சாப்பாட்டு இராமன்களா?' என்று வினவத் தோன்றுகிறது அல்லவா? இல்லை. கொடை வள்ளல்கள்! அறிஞர்கள்! இசைவாணர்கள்! கலை வளர்த்தவர்கள்! வீரர்கள்! மானமுடையோர்! மேனாட்டாரைப்போல் அகத்தைப் புறமாக்கியோர் அல்லர்; அகத்தை அகமாகவே சுவைத்தவர்கள்! இவ்வாறு நரகம் என்ற ஒன்றையும் சொர்க்கம் என்ற ஒன்றையும் உம்பர் உய்ந்து உணர இடம் வைக்காமல் இம்மையிலேயே கண்டார்கள் கன்னித் தமிழர்!

இளவேனிற் கால வெயிலிலே இரண்டரைக் காதம் நடந்தவனுக்குக் குளிர் தருவின் கீழ் தெவிட்டாத இளநீரைக் கொடுத்தால், எப்படி மகிழ்ச்சி அடைவான்! அதைப்போலத்தான் புரவலர் ஈந்த பொருளைக் கண்டு மகிழ்ந்தார்கள் புலவர்கள்! புலவர் ஒருவர் கூறுகிறார்: "உறுபொருள் கைவர உவகை மிககொளும், வறுமை நிகர்த்தது" என்று! அவ்வாறு பெற்ற பொருளால் தலைக்கனம் உற்றனரா புலவோர்? இல்லை. அப்போதும் தம் பழைய நிலையை மறந்திலர்.

பெருஞ்சித்திரனார் பெற்றார் பெருமளவு பரிசில். அதைக் கொண்டு சென்று தம் இல்லக் கிழத்தியிடம் ஈந்து, "உன்னை அணிகளால் மறை, ஆடைகள் வீடெங்கும் நிரம்பட்டும், ஆயத்தமாகட்டும் அறுசுவை உணவு" என்றாரா? அன்று. மாறாக, "உன்னை விரும்புவோர்க்குக் கொடு" என்றார். "நமக்கு உதவியவர்களுக்குக் கொடு" என்னவில்லை. "எல்லோர்க்கும் கொடு" என்றார். "ஈந்தார் ஈயாதார் என்று நோக்காது ஈ" என்றார். —இது அன்றோ தமிழனின் ஈரம்,

இவ்வாறு பெறுகின்றார்களே பரிசில் — அதை எப்படியாவது பெற்றுவந்து விடுவார்களோ புலவர்கள்? நான்கு தடவை காலொடித்து, மூன்று தடவை முகம் சுளுக்கி, இருதடவை குறை பேசி, ஒரு தடவை தயங்கித் தயங்கிக் கொஞ்சம் கொடுத்தால் பெற்றுக் கொள்வரோ அப் பெருந் தகையர்? மாட்டார்...வேண்டாம் என்று விலக்குவர்!

இவ்வாறு பலரைக் கண்டு, சிலரிடம் சிறிது வாங்கும் வாழ்க்கையை வெறுத்தாரோ என்னவோ, இடைக்காலப் புலவர் பாடுகிறார்;

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் எனக்குத்தான் பொன்னைத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?

—என்று.

என்னைப் பிறப்பித்தானே எதற்கு?—வாழ! எனின், ஒன்று பொன்னைக் கொடுத்திருக்கவேண்டும். இல்லை, கல்லையும் மண்ணையும் தின்னக் கற்றுக்கொடுத்திருக்கவேண்டும் — இதையும் செய்யாமல் அதையும் செய்யாமல் என்னைப் படைத்துவிட்டானே, அவன் ஒழிக! என்கிறார். "கடவுளை ஒழிக என்று சொல்லிவிட்டாரே! ஆத்திகமணிகள் ஆர்த்தெழுவரே? என் செய்வது?" என்ற பயம் வேண்டாம்! நமக்குத் துணை வருகிறார் வள்ளுவர்.

**இறந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்**

—என்கிறார். ஆனால் பாரபட்சம் காட்டுகிறீரே! கடவுள் மட்டுமா அழியவேண்டும்? இந்த மண்ணை அழியவேண்டாமா? என்று வள்ளுவரைக் கோபித்துக்கொண்டு, "தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் செகத்தினை அழித்திடுவோம்" என்கிறார் பாரதியார்.

இவ்வாறு கடவுளையும் உலகையும் மனிதன் அழிக்க முற்படுவது எதனால்? அவன் வாழ முடியாததால்தானே! அவனுக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வுலகம் அவனுக்குப் பலன் ஏதும் தராவிட்டால் அழிக்கபட வேண்டியது தானே? ஆனால் சுகமாக வாழும் சிலருக்கு அது கடினமாகத் தோன்றலாம்! உலகம் எல்லோருக்கும்தானே தவிர, இரண்டொரு சுகவாசிகளுக்கல்ல! அதனால் புலவர்கள் எல்லோரும் இப்படி ஆர்த்தெழுந்து பாட்டுகளைப் பாடினர். அப்பாடல்களால் ஏதாவது நன்மை உண்டா என்றால், உண்டு! பண்டைத் தமிழர்களின் வறுமை நமக்குச் சிறந்த பாடல்களையும், சுவைக்கத் தெவிட்டாத நூல்களையும் தந்துள்ளது. அன்றியும், தற்போது வறுமை வாய்ப்பட்டோர் இப்புலவர்களின் வாழ்க்கையைப் படித்து, "இவ்வளவு கொடிய வறுமைகூட உண்டோ? அவர்கள் அனுபவித்த வறுமைக்குமுன் நம்முடையது எவ்வளவு?" என்று ஆறுதல் அடையவும் உதவும் அல்லவா!

பொங்கல் மலர்

★

பொங்கல் மலருக்குரிய தொகை (கழிவு 12-காசு நீக்கி) முழுவதும், பழைய பாக்கி முழுவதும் 6—1—59-க்குள் அனுப்பத்தவறும் விற்பனையாளர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
'திராவிடநாடு'

கனவு, கனவுதானா?

—[கா. வேழவேந்தன்]—

—படிநி—

கனவு நினைவாகலாமா? நினைவானதே இல்லையாமே! சரித்திரத்திலே சான்றுகளே இல்லையாமே! தனிநாடு விடுதலை என்னும் கனவு நினைவாக முடியாது என்று எள்ளி நகைக்கிறார்களே! என்ன சொல்வது இவர்களைப்பற்றி!

அன்று பேரறிஞன் எமர்சன் கூறிய புதுமைக் கருத்துக்களைச் சீரணிக்கமுடியாத தான்தோன்றிகள் சிலர் அவரை, "கனவுகளையல்லவா, கனவுகாண்கிறார் இவர்!" என்று ஏளனம் செய்தார்கள்; ஆனால் இன்று அவர் சிந்தனையிலே துளிர்த்த கருத்துக்கள் சோடைபோகவில்லையே; அன்று அவர் கருத்துப் புரட்சியிலே கண்ட கனவு நினைவாகி விட்டதே!

"உலகம் தட்டையானது என்பது முழுக்க முழுக்கத் தவறு; அது உருண்டையானதுதான்" என்றுகூறிக் கடற்பயணம்துவக்க ஆதரவு கேட்ட கொலம்பஸை, "காணாத புதுக்கனவு காண்கிறான் பாவம்!" என்றுதானே பரிதாபக் குரலிலே கூறினார்கள்; அவர் தெருவிலே நடக்கும்போது, தங்கள் நெற்றியைத் தொட்டுக்காட்டி "பைத்தியம் போகிறது" என்றுதானே சொன்னார்கள்! ஆனால் நிலவியல்பற்றி அவர் கண்ட கனவு கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே நினைவாகிவிட்டதே!

"எவ்வளவுதூரம் இருந்தாலும்' காற்றிலே மிதந்துவரும் ஒலி அலைகளைத் திரட்டி, மீண்டும் நாம் தெளிவாகக் கேட்கமுடியும்; அந்தக் கருவிதான் ரேடியோ" என்று மார்க்கோனி சொன்னார். "ஐயோ! விசித்திரக் கனவல்லவா காண்கிறான் இவன்" என்று அவர் நண்பர்கள் அனுதாபப்பட்டார்கள்; அவரை வலியத் தூக்கிக்கொண்டுபோய் மருத்துவரிடம் அவர் மூளையைச் சிகிச்சை செய்தார்கள்! ஆனால் அந்த அறிவியல் வித்தகன் கண்ட வானொலி பற்றிய கனவு நினைவாகி விட்டதே!

"அம்மைநோய் என்பது ஆண்டவனால் உண்டாக்கப்படுவதல்ல; அம்மைப்பால் குத்திக்கொண்டால் தடுக்கும் ஆற்றலைப் பெறலாம்" என்று அம்மை குத்தும் முறையைப்பற்றிச் சொன்னார் ஜென்னர். "சித்தங்கலங்கியவர்; ஏதோ கனவுகண்டு உளறுகிறார்" என்றுதானே அன்று சொன்னார்கள்; அவரே மூன்றுமுறை தன் கைகளில் அம்மை குத்திக்கொண்டபோதும் நம்புவதற்கு ஆள் இல்லையே! அவர் பெருமுயற்சியுடன் ஓரிரு குழந்தைகளுக்கு அம்மை குத்தியபோது, அந்தக்குழந்தைகளுக்குக் கொம்பு முளைக்கிறது என்று கதை கட்டிவிட்டவர் எத்தனைபேர்? அந்தக் குழந்தைகள் மாடுகளைப்போலவே கத்துகின்றன என்று கற்பனைச் சரக்குகளைச் செலாவணியாக்கியவர் எத்தனைபேர்? ஆனால் அன்று ஜென்னர் கண்ட கனவு, இன்று மருத்துவ முறையில் இன்றியமையாத நினைவாகிவிட்டதே!

சொல்லவந்ததை விட்டுவிட்டுச் சுற்றி வளைத்துச் செல்கிறேனே என்று ஆத்திரம் அடையவேண்டாம். அறிவியல். பொருளியல், அரசியல் ஆகிய எத்துறையிலும் முதலில் புதிய கருத்துக்களுக்கு எதிர்ப்பு இருக்கத்தான் இருந்திருக்கின்றது. இதற்காக நாடு வாழ, நலிவு போக நம் விடுதலை வீரர்கள் காணும் கனவு, என்றுமே கனவாகவே இருந்துவிடும் என்று அஞ்சவேண்டாம்! அப்படி என்ன நாம் நினைவாகவே முடியாத கனவுகளைக் காண்கிறோம்? அப்படி என்ன நாம் காணும் கனவுகள் அறிவுக்கே ஒவ்வாதவையாக இருக்கின்றன?

"உலகத்தில் முதன் முதல் தோன்றியநாகரிகங்களில் ஒப்பற்ற தனி நாகரிகம் படைத்த இனம், பாராண்ட நம் திராவிட இனம், அந்த இனம் மீண்டும் தன்னைத் தானே ஆண்டுகொள்ளக் கூடாதா?" என்று கனவு காண்கிறோம்: அப்படி என்ன இந்தக் கனவிலே பழியும் பாவமும் மண்டிக் கிடக்கின்றது? இந்தக் கனவு நினைவாகவே முடியாதா? கூடாதா?

"வையகத்திலே முதன்முதல் தோன்றிய உயர்தனிச்செம்மொழிகளில் நம் அருமைத் தமிழ் ஒன்று; அந்த மொழியை மண்ணோடு மண்ணாக்கி, நேற்று முகிழ்த்த வேற்றுமொழி ஒன்று வந்து நம்மைக்கட்டி ஆளக்கூடாது," என்று கனவுகாண்கிறோம். இந்தக் கனவிலே என்ன குற்றங்குறைகள் செறிந்துகிடக்கின்றன? இந்தக் கனவு நினைவாக முடியாதா? கூடாதா?

"வண்மை மிகுந்த திராவிடம், வளங்களையெல்லாம் வாரிவாரிக் கொடுத்தாலும், நாட்டு மக்கள் வறுமையைத்தானே அறுவடை செய்கிறார்கள்; மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கம் என்ற இரு வேறு அரசாங்கங்களுக்கு வரிகளைக் கொட்டிக்கொடுப்பானேன்? நம்மை நமக்குள் நாமே நன்குணர்ந்து, நம்மவர்களால் அமைந்த உரிமையாட்சி ஏன் ஏற்படக்கூடாது?" என்று கனவு காண்கிறோம்; இந்தக் கனவிலே என்ன பொல்லாங்கு சூழ்ந்திருக்கிறது? இந்தக் கனவு நினைவாக முடியாதா? கூடாதா?

"சாதிக்கொரு நீதி கற்பிக்கும் மனு நீதியும், பகவத்கீதையும் போற்றப்படுகிறதே; ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் தோன்றிய அருங்குறள், உலக நெறிகளை எல்லாம் உள்ளடக்கிய பேரிலக்கியம், ஏன் மக்களின் 'பொதுமறை'யாக ஆகக்கூடாது என்று கனவு காண்கிறோம். இந்தக் கனவிலே அறமே இல்லையா?

(11-ம் பக்கம் பார்க்க)

கற்பனை நாடகம்

அந்தி சிரிக்கிறது!

ச. இராமலிங்கம், எம்.ஏ.

காட்சி 1

இடம்:- இளம்பரிதிக்கோட்டம்

பாத்திரங்கள்:- கருணாநந்தர், விமலன், துமிலன், மல்லிகா, குணவதி.

[கருணாநந்தர் திருக்குறள் சுவடிகளைப் புரட்டிக் கொண்டு ஓர் சுவடியை எடுத்து...]

கருணாநந்தர்:- 'கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ்சொல்'......

ஆ... ஆ!...... என்ன அருமை! என்ன அருமை ...கேளாரும் வேட்ப மொழிவதாஞ்சொல்..... கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல் வன்மையாகும — அப்படிப் பேசுவோர் இருப்பின் நம் தமிழ்நாடு எவ்வளவு பயனுடைத்தாகும்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்
நிரந்தினிது சொல்லுதல் வல்லார் பெறின்

ஞாலம் விரைந்து தொழில் கேட்கும்... அதாவது உலகமே விரைந்து அவர் ஏவலைக்கேட்கத் தயாராக இருக்கும் ...யாருடையது? நிரந்தினிது சொல்லுதல் வல்லார் பெறின —அதாவது கருத்துக்களை அழகாகக் கோர்த்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால்......எவ்வளவு பெரிய பொருள்...எவ்வளவு நுணுக்கமாகக் கூறுகின்றார்.........இதுவன்றோ திருவள்ளுவரின் திறன — ஆழ்வார்களும், அடியார்களும் பாடல்களும் பிரபந்தங்களும் பாடியிருக்கிறார்கள். ஆனால் அவைகள் எல்லாம் ஒரு தனிப்பட்ட இனத்தைத் தாழ்த்தியோ, போற்றியோ இருக்கின்றனவே ஒழிய, உயர்ந்த கருத்துக்களை சிறந்த முறையில் நுணுக்கமாக உலகுக்குப் பயன்படும்படி இவரன்றோ கூறியிருக்கிறார். இதைக் கண்டுதான் அவ்வை யார்...

[விமலன், துமிலன் இருவரும் உடல் முழுதும் நனைந்த ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்து]

விமலன், துமிலன்:- தந்தையே... தந்தையே மன்னிக்கவேண்டும்.

கருணா:- விமல, துமில என்ன இது......மங்கையன்றோ மயக்கமுற்று இருக்கிறாள்.

விமலன்:- ஆம் தந்தையே—நாங்கள் குளிக்கச் சென்றோம்—ஆற்றை நெருங்குப்போது ஒரு சப்தம் கேட்டது......ஓடினோம் இப்பாவை...

பாத்திரங்கள்:	
குணசேகரன்	—இரத்தினபுரி ஆஸ்தான சிற்பி
இன்பசாகரன்	—சுவர்ணபுரி இளவரசன்
கருணாநந்தர்	—இளம்பரிதிக்கோட்டத் தலைவர்
பரஞ்சோதிமுனிவர்	—மகேசமண்டலத்துக்குருதேவர்
குணவதி	—குணசேகரன்-மாமன் மகள்
சித்ரலேகா	—அழகாபுரி இளவரசி
திலகவதி	—குணசேகரன் தாயார்
மல்லிகா	—விமலன் சகோதரி
விமலன், துமிலன்	—கருணாநந்தரின் சீடர்கள்

கருணா:- நல்லது விமல...இவளை இப்படியே படுக்கவை. உன் தங்கை மல்லிகாவைக்கூப்பிடு.

விமல:- அப்படியே தந்தையே...

கருணா:- துமில......ஏன் நின்று கொண்டிருக்கிறாய்......மயக்கம தெளிவதற்கு வேண்டிய பச்சிலைகளைக் கொண்டுவா...

[துமிலன் போய்விட கருணாநந்தர் அவள் கை நாடியைப் பிடித்துப் பார்க்கிறார். பிறகு மெதுவாக, அவள் பாதத்தையும் உள்ளங் கைகளையும் சூடு செய்கிறார். அப்போது மல்லிகா வந்து...]

மல்லிகா:- தந்தையே...... இவள்...

கருணா:- நட்டாற்றில் விழுந்து மயக்கமுற்றிருக்கிறாள். விமலா... துமிலா... வந்துவிட்டீர்களா... இருவரும் பிடியுங்கள்..இவளை உள்ளே எடுத்துச்சென்று படுக்க வைப்போம்... மல்லிகா இவளுடைய நனைந்த ஆடைகளைக் களைந்து நல்லதொரு உடையை உடுத்து — சிறிது சூடான கஷாயம் கொடு- அவள் தெளிந்தெழுந்த பின் என்னைக் கூப்பிடு.

[குணவதியைத் தூக்கிக் கொண்டு உள்ளே செல்லுதல்--சிறிது நேரம் கழித்து கருணாநந்தர், துமிலன், விமலன் வெளியே அமர்ந்திருக்க மல்லிகா வெளிவந்து]

மல்லி:- தந்தையே — அவள் கண்ணைத் திறந்து விழித்துப்

பார்க்கிருள் — நீங்கள் உள்ளே வரவேண்டும்.

கருணு:- அப்படியா இதோ வந்து விட்டேன் மகளே...

[மூவரும் உள்ளே போக... அப்போது குணவதி படுக்கையிலிருந்து எழுந்து...

நான் எங்கே இருக்கிறேன் ...நான் எங்கே இருக்கிறேன்...அத்தான்...அத்தான்......இது மகேசன் மண்டலம்தானே......... எங்கே என் அத்தான்... எங்கே....எங்கே....சேகர் ...அத்தான்...

மயக்கமுற்று மறுபடியும் விழுந்துவிட]

கருணு:- மல்லிகா......இது ஏதோ ஒருவித அதிர்ச்சியினுல் ஏற்பட்டிருக்கிறது...இதை விரைவில் நாம் குணம் செய்துவிடலாம்......பாவம் மலர் பூக்கு முன்னே உதிர்ந்துவிட்டது... அத்தான்......சேகர்.......சேகர் தமிழ் நாட்டுப பெயராக இல்லையே! இவள் யாரோ!

காட்சி 2

இடம்: மகேசன் மண்டலம்:

[குணசேகரன் ஒரு கல்லின் மேல் அமர்ந்து சித்திரம் வரைந்துகொண்டிருகிருன் — அப்போது சித்ரலேகா......]

சித்ரா:- யாரோ...இவர் யாரோ... என்ன பேரோ...எந்த ஊரோ... நானறியேன்...

குண:- வண்ணப்புருவே நீ யார்?

சித்ரா:- உம்...நான் சொல்லமாட்டேன்...

குண:- அப்படியென்ருல் நானும் சொல்லமாட்டேன்...

சித்ரா:- அன்பரே......அடுத்த வாரம் நான் அழகாபுரிக்குச் செல்லலாம் என்று இருக்கிறேன்...

குண:- சித்ரா......என் தங்கச்சிலையே...என்னைத் தனிமையில் விட்டா அழகாபுரி போகின்ருய் ...சித்ரா...எப்படியிருப்பேன்? நான் எப்படியிருப்பேன்? வண்ண மயில் தன் சிங்காரத் தோகையை விரித்தாடும் போதெல்லாம் — நீ சிற்ருடை உடுத்தி, சிற்றிடையை அசைத்து நடனம்புரிவது அல்லவா ஞாபகம் வரும்; கண்ணே வேண்டாம்—உனக்கு இன்னும் போதனைகள் கூட முடியவில்லையே.

சித்ரா:- முடியவில்லைத்தான் ...ஆனுல்...

குண:- ஆனுல் என்ன...தாயைப் பிரிந்திருக்கும் நீ பசுவைப் பிரிந்த கன்றுபோல் இருக்கின்ருய்—தெரியும், இருந்தாலும் நீ இன்னும் இள்ளைப் பருவத்தில் இல்லையே!

சித்ரா:- ஏன்? தென்றல் தவழ் சோலையில் நான் தனியாக சுற்றுவதால்தானே

(இன்பசாகரன் வந்து)

இன்பசாகரன்:- இல்லை இனிப்புப் பண்டத்தைச் சுற்றி வரும் சிறுசுகள்போல் அவனைச்சுற்றி வருவதால்...

குண:- ஆ! இன்பசாகரன்...

சித்ரா:- ...இன்பசாகரன்...

இன்ப:- சித்ரா—நான் உன்னை எச்சரிக்கிறேன். அரசகுடும்பத்தில் பிறந்த நீ இந்த நாடோடியைக் காதலிப்பது அரச குடும்பத்துக்கே இழுக்கு. உன் குலமென்ன? அந்தஸ்து என்ன...

சித்ரா:- இரத்தினபுரி இளவரசே! எனக்கு எல்லாம் தெரியும். வேண்டுமென்ருல் சொல்கிறேன் கேள்—என்குலம் பெண் குலம்—அந்தஸ்து தற்போது சுவர்ணபுரி ஆஸ்தான சிற்பி குணசேகரர் காதலி...

இன்ப:- ஆ!...என்ன திமிர்...

குண:- (ஏளனச் சிரிப்புடன்) தோழரே....தாங்கள் வந்த வேளை...

இன்ப:- நாடோடிப் பயலே! என்னையா தோழரே என்று அழைக்கின்ருய்...நான் இரத்தினபுரி இளவரசன் இன்பசாகரன்— இளவரசே என்று கூப்பிடு...

குண:- ...இளவரசன்!! (ஏளனச் சிரிப்புடன்) இளவரசர் என்று நெற்றியில் மாணிக்கங்கள் புதைத்திருக்கின்றனவா—அல்லது கோமேதகங்கள் இழைத்திருக்கின்றனவா...

இன்ப:- ஆ!...பஞ்சைப் பயலே... என்ன திமிர்......என்னையா எதிர்த்துப் பேசுகின்ருய்...... உன்னை என்ன செய்கிறேன்பார்

[வண்ணங்கள் குழைத்து வைத்திருந்த பாத்திரத்தை எடுத்து அவன் முகத்தில் வீசியெறிந்து விட்டு அவன் போய் விடுதல்]

சித்ரா:- அத்தான்...

[அவை அவன் கண்களில் எரிச்சல் உண்டாக]

குண:- சித்ரலேகா......ஐயோ...... சித்ரா...என் கண்கள் எரிகின்றதே — கொடிய நஞ்சுகள் கலந்த சிறந்த வண்ணமாயிற்றே...சித்ரா...சித்ரா...... தண்ணீர்...

சித்ரா:- இதோ வந்துவிட்டேன் அன்பரே...

குண:- சித்ரா...சித்ரா...நீ எங்கே இருக்கிருய். என் கண்கள் தெரியவில்லையே.....சித்ரா...... என்னை நம் குருவிடம் அழைத்துச்செல்—சித்ரா...என் தங்கச் சிலையே...ஒளி மங்கா ஓவியமே ....ஒன்றுமே தெரியவில்லையே —ஞாலமே இருண்டுவிட்டதா-.

சித்ரா:- அன்பரே இதோ பாருங்கள்.

குண:- சித்ரா....கண்மணி....கண்ணின் கருமணியே......ஒன்றும் தெரியவில்லையே — பார்வை பறிபோய்விட்டதே — சித்ரா... தங்கச்சிலையே — எங்கே...அருகில் வா......(தடவி)...ஐயோ... வட்ட நிலா முகத்தழகி என் அருகில் இருந்தும் எனக்கு ஒன்றும் தெரியவில்லையே... சித்ரா......என்னை அழைத்துக் கொண்டுபோ...சீக்கிரம்...

காட்சி 3

இடம்:- இளம்பரிதிக்கோட்டம்.

மல்லிகா:- குணவதி நீ வந்து ஒரு திங்கள் ஆகியும், இன்னும் எங்களிடம் நம்பிக்கை தோன்றவில்லையா......

குணவதி:- மல்லிகா... நம்பிக்கை இல்லை என்பதல்ல...... என் தவறு......

கருணு:- மன்னிக்க முடியாதது என்று தெரிந்துகொண்டேனயா —பெண்ணே கேள்! பெண்களை விக்ரகத்திற்குச் சமமாகச் சொல்லலாம்-விக்ரகம் கோவில் கர்ப்பக்கிருகத்திற்குள் இருந்தால்தான் தெய்வம்—வெளியே கிடந்தால் சாதாரண ஒரு கல்—

போவோரும், வருவோரும் உதைத்து மிதித்துவிட்டுத் தான் செல்வார்கள் — அது போன்று பெண்கள் இல்லத்திற்குள் இருந்தால் தான் மதிப்பு; இல்லையென்றால்......

குண:- தந்தையே...... சொல்ல வேண்டாம்...... அதற்குமேல் சொல்லவேண்டாம்...

கருணா:- பாவையே — தவறினை உணர்ந்த பிறகு இனிக் கவலை வேண்டாம் — தயவுசெய்து நீ யார் என்று சொல்...

குண:- வேண்டாம் தந்தையே — அது ஒன்று மாத்திரம் என்னைக் கேட்காதீர்கள்—இனி நான் ஓர் புதிய பெண்—உங்கள் மகள்— பழைய கதை வேண்டாம்...

[அந்த நேரத்தில் விமலன் வந்து]

விமலன்:- தந்தையே-மகேச மண்டலத்துப் பரஞ்சோதி முனிவர் தங்களைக்காண வந்திருக்கிறார்...

கருணா:- குணவதி... மல்லிகா... நீங்கள் உள்ளே செல்லுங்கள் விமலா... நீ அவரை அழைத்து வா......

[விமலன் வெளியே சென்று பரஞ்சோதி முனிவருடன் குணசேகரனையும் அழைத்துவந்து.]

கருணா:- வாருங்கள்... வாருங்கள் ... யார் இது... இது என்ன கட்டு...

பரஞ்:- கருணானந்தா...இவன் என் வர்ணாஸ்ரமத்தில் ஓவியக்கலை கற்றுவரும்சீடன் குணசேகரன். —சிற்பத்தில் தேர்ச்சி பெற்று ஓவியத்திலும் சிறந்து விளங்கினான்-ஒளி மங்கா ஓவியம் தீட்ட வேண்டும் என்று என்னைக் கேட்டான்—நான் வண்ணங்கள் தயாரிக்கும் விதத்தையும் அவற்றைஉபயோகிக்கும் விதத்தையும் கற்றுக்கொடுத்தேன். தவறுதலாகப்பூச்சு இவன்கண்களில்விழுந்துவிட்டது,பார்வை மங்கிவிட்டது...

குணசேகரன்:- சித்ரா... என் சிங்காரப் பைங்கிளியே—கொஞ்சும் அஞ்சுகமே... எங்கே இருக்கின்றாய்... எங்கே இருக்கின்றாய் (மயக்கமுடன் விழுதல்)

கருணா:- ஐயோ மயக்கமுற்று விழுந்துவிட்டானே... விமலா... நீர் கொண்டுவா...... இவன் என்ன அடிக்கடி மயக்கமுற்று விழுகிறானே! (விமலன் தண்ணீர் கொண்டுவர).

பரஞ்:- கருணானந்தா.........இவன் காதலி... அழகாபுரி இளவரசி சித்ரலேகா... ஆனால் அவள் இப்போது,கண்பார்வை இழந்த பிறகு இவனைக்காதலிக்கவில்லை ......குருடன் என்பதற்காக — ஆனால், இவன்தான் அடிக்கடி சித்ரா... சித்ரா என்று உளறுகிறான் — தலையில் ஏற்பட்ட காயம் கூட அவன் ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் ஓடி, தடுக்கி விழுந்ததினால் ஏற்பட்டதுதான்...இதுதான் விஷயம். தாங்கள் எப்படியாவது இவன் பார்வையைச்சரிப்படுத்தவேண்டும்.

கருணா:- முனிவரே... அதுமாத்திரம் போதாது — சுயநினைவும் இல்லை — புத்தி மாறாட்டமாக இருக்கிறது-அதையும்கவனிக்க வேண்டும்...

பரஞ்:- தங்கள் சித்தம் — நான் சென்று வருகிறேன்.

கருணா:- தயவுசெய்து அழகாபுரி இளவரசியை வரவழைக்க முடியுமா...

பரஞ்:- கருணானந்தரே...அது இனி ஆகாத காரியம். அழகுக்காகத் தான் இவனைக் காதலித்தாளே ஒழிய, அன்புக்காக அல்ல...

கருணா:- காதலித்த ஒருவன்? அழகு குறைந்துவிட்டால் அவனை நிராகரித்துவிடுவதா? அப்படியென்றால் பெண்கள்!

பரஞ்:- அவள் சாதாரணப் பெண் அல்ல—அழகாபுரி இளவரசி...

கருணா:- யாராயிருந்தாலென்ன? அந்தி சிரிக்குமே!

பரஞ்:- கருணானந்தரே...... அந்தி சிரிக்கும்: அவள் மாத்திரம் குடிலில் வளரும் குமரியாக இருந்தால். கன்னி மாடத்தில் உலவும் கன்னிப பெண்ணல்லவா... சிலந்தி இனமாயிற்றே.

கருணா:- முனிவரே இருக்கலாம்— எனினும் அழகுக்காகத்தான் கணவன் என்ற சீர்கெட்ட பண்பைக் கடைப்பிடிக்கும் அவளைக் கண்டு உலகம் என்றாவது ஒரு நாள், இன்று அல்ல என்றால் நாளை, கட்டாயம் சிரிக்கும்-நீங்களே பார்ப்பீர்.

பரஞ்:- அந்தி சிரிக்கட்டும்... நாம் ஏன் கவலைப்படவேண்டும் — நான் போய்வருகிறேன்...

[அடுத்த இதழில் முடியும்]

8-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தக்கனவு நினைவாகமுடியாதா? கூடாதா?

"பரீட்சித்துவின் கதையும் பத்தினியை அடகுவைத்த அரிச்சந்திரனின் கதையும் நித்தம் நித்தம் பாராயணம் செய்யப்படுகிறது; ஆனால் பறம்புமலை ஒன்றைத் தவிர, ஏனைய முன்னூறு ஊர்களையும் பரிசிலர்க்கு அளித்துவிட்ட வள்ளல் பாரியின் வரலாறும், குமணனின் அறவாழ்வும் மிகுதியாகப் போற்றப்பட வேண்டும்" என்று கனவு காண்கிறோம்; இந்தக் கனவிலே நேர்மையே இல்லையா? இந்தக் கனவு நினைவாக முடியாதா? கூடாதா?

"தன்னிடம் ஒப்படைத்த ஆட்சியைத் துச்சமெனக் கருதி, சூதாட்டத்திலே வைத்துத் தோற்ற தருமபுத்திரன் கடவுளாகப் போற்றப்படுகின்றான், பிள்ளைகள் படிக்கும் சரித்திரத்திலே முதலிடம் பெறுகிறான்; ஆனால் தன்னேரிலாத் தென்னவன் — தமிழர் மானம் பழிக்கப்பட்டதெனக் கேட்டவுடன் படையுடன சென்று தமிழர் வீரத்தை நிலைநாட்டியவன்—இமயத்தின் நெற்றியிலே தமிழரின் வெற்றியைப் பொறித்த மாவீரன் — சேரன் செங்குட்டுவனின் வீரத்தை வரலாற்றில் முதலிடம் பெற்றாக வேண்டும்" என்று கனவு காண்கிறோம்; இந்தக் கனவிலே நீதி இல்லையா, நியாயம் இல்லையா? இந்தக் கனவு நினைவாக முடியாதா? கூடாதா?

நம் இலட்சியங்கள் வலிவும் பொலிவும பெற்றவை.

நம் குறிக்கோள்கள் கோணலும் குறையும் இல்லாதவை.

நம் கொள்கைகள் நீதியும் நேர்மையும் நிறைந்தவை.

இவற்றை மனதிலேகொண்டு நெஞ்சத்தில் கொஞ்சமும் சோர்வின்றிப் பாடுபடுவோம்; நிச்சயம் ஒருநாள் வெற்றியை அறுவடை செய்வோம்!

நாம் காணும் கனவுகள், கனவுகளல்ல! அவை ஒருநாள் நினைவுகளாகியே தீரவேண்டியவை! அந்த நாள்தான் அனைவரும் விழிப்புணர்ச்சி பெறும் நாள்! அந்தநாள் வந்திட ஆவனவற்றை முழு மூச்சுடன் இன்றே தொடங்குவோமாக!

வெல்லஸ்லி சாகவில்லை!

[தென்னரசு]

டில்லியினரால் இழைக்கப்படும் கொடுமைகளையும், வஞ்சகமான ஆட்சி நிர்வாகத்தையும் நாளடைவில் எதிர்த்துச் சுதந்திர உணர்ச்சியைப் பெற்று வருவது தென்னாடுதான். இதனை அடக்குவதற்கு டில்லி அரசு இப்போது மற்றொரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்து அதை அமல் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. காங்கிரசின் பெயரால், காந்தியாரின் பெயரால், நேருவின் பெயரால் தென்னாட்டின் அன்பினைப் பெற முயன்று தோல்வி கண்ட வடவர்கள், இப்போது இராணுவத்தைக் கொண்டு தென்னாட்டு எழுச்சியை அடக்க எண்ணியிருக்கிறார்கள்.

தென் மண்டலத்துக்குப் போதுமான ரிசர்வ் போலீஸ் படையமைப்புத் திட்டத்தை அமலாக்கப்போவதாக, டிச.11ந் தேதியன்று இராஜ்ய சபையில் உள்நாட்டிலாகா அரசாங்க அமைச்சர் தத்தார் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஏற்பாட்டைக் கேரள அரசாங்கம் ஏற்கவில்லையென்றும் அவரே தெரிவித்திருக்கிறார். மற்ற மாநிலங்கள் வழக்கம்போல் தலையாட்டி இருக்கின்றன.

இந்தப்படை அமைப்புப்பற்றித் தெளிவான விளக்கம் தரப்படவில்லை. தென் மண்டலத்திற்கே ஒரு தனிப்படை திடீரென்று அமைப்பதற்கான காரணமும் தெரிவிக்கப்படவில்லை. அமைக்க இருக்கும் அந்தப் போலீஸ் படையில் அங்கம் வகிப்போர் யார்? தென்மண்டலத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது வடநாட்டுக்காரர்களா? இந்த விளக்கத்தையும் அமைச்சர் தந்தாரில்லை. படை வருகிறது; படை வருகிறது—என்று மட்டும் தெரிவித்திருக்கிறார். தமிழகத்தில் வீரர்களுக்குப் பஞ்சம் என்று டில்லி சர்க்கார் கருதுகிறதா? அல்லது தென்னாட்டுப் புரட்சியை ஒடுக்கத் தென்னாட்டுப் போலீஸ் படைக்கு மனம் வராது என்று கருதி வடவர் பட்டாளத்தை இங்கு இறக்க நினைக்கிறதா? நமக்குப் புரியவில்லை.

—டில்லி சர்க்காரின் இந்தத் திட்டம் நமக்கு இப்பேர்ப்பட்ட ஐயங்களை எழுப்புகிறது.

வெளிநாட்டுப் படையெடுப்புக்கு அஞ்சாமல் வாழும் வகையில், இயற்கை அமைப்பைப் பெற்ற நாடு உலகத்திலேயே திராவிட நாடு ஒன்றுதான். சுற்றிலும் கடல். முற்றுகையிட அந்நியர் இல்லை. டில்லியைச் சூழ்ந்திருப்பதைப் போல் காஷ்மீர் சிக்கல், பாகிஸ்தான் மிரட்டல்,-தென்னாட்டுக்கு அறவே இல்லை. ஆனாலும் டில்லி சர்க்கார் தென் மண்டலத்திற்கு ஒரு பொதுவான போலீஸ் படை அனுப்புவோம் என்கிறது.

வெள்ளை ஏகாதிபத்யத்தை விரட்டியடித்ததாகப் பேசும் காங்கிரசார், அந்த ஏகாதிபத்யத்தை நிலைநாட்டிய வெல்லஸ்லி மனோபாவத்தை முழுக்க முழுக்கக் கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

ஆங்கில அரசை இந்திய உபகண்டத்தில் நிலை நிறுத்திய கவர்னர் ஜெனரல் வெல்லஸ்லி, இன்று டில்லி அரசு வெளியிட்டிருக்கும் திட்டத்தைப்போல் ஒரு துணைப்படைத் திட்டத்தை அன்று அமுலுக்குக் கொண்டு வந்தான். அந்தத்திட்டத்தின்படி, சுதேச மன்னர்கள் ஆங்கில அரசுடன் நட்பாக வாழ வற்புறுத்தப்பட்டார்கள். அதன்படி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சுதேச மன்னர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்; ஒவ்வொரு சுதேச மன்னரும், கவர்னர் ஜெனரலின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பட்டாளத்தையும், ஒரு ரெசிடெண்டையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இதன் செலவை சுதேச மன்னர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வெல்லஸ்லியின் இந்த உதவிச்சேனை ஏற்பாட்டுக்கும் இன்றைய டில்லி அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைத்திட்டத்திற்கு வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

தென்னாட்டின் எந்த விதமான பாச உணர்ச்சிக்கும் கட்டுப்படாத ஒரு வடநாட்டுப்படையைத் தென்னாட்டில் இறக்குமதி செய்ய டில்லி சர்க்கார் நினைக்கிறது! அந்தப் படையின் அதிகாரத்தை டில்லியே வைத்துக்கொள்ளத் திட்டமிடுகிறது. அந்தப் படையின் பெருஞ்செலவை மாநில அரசுகளே ஏற்கவேண்டும் என்று கட்டளையிட அவர்கள் தவறப் போவதில்லை,

விரட்டப்பட்ட வெல்லஸ்லி, வெள்ளைக் குல்லாயோடு மீண்டும் குடியேறி இருக்கிறான். அவன் சாகவில்லை.

அந்த வெல்லஸ்லி அந்நியன். உதவிச்சேனை ஏற்பாட்டை அமலாக்கித் தனது ஆட்சியை ஒப்புக்கொள்ளவைக்கத் திட்டமிட்டான். ஆனால் இந்தக் காங்கிரஸ் வெல்லஸ்லிகள் தென்மண்டலத்திற்கென்றே பொதுவான போலீஸ் படை நிறுவுவதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது? திராவிடத்திற்கு, டில்லி அந்நிய அரசுதான் என்பதை இவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்களா? தென்னாட்டில் இப்போது இருக்கிற போலீஸ்படையே பசியெடுத்து அலையும்போது, வேறொரு புதிய போலீஸ்படை அனுப்புகிறார்களாம்! கொடுமை! கொடுமை!!

★

வாசகர்களுக்கு

இந்த இதழில் இருந்து அண்ணா அவர்கள் தரும் கருத்துரைகள் தொடர்ந்து இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி.என்.அண்ணாதுரை

பொதுப்பணிகளில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள் சட்டமன்றம் உதகையில் நடக்க இருப்பதைப்பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தையறிய ஆவல் கொண்டுள்ளனர்.

நேரடியாக நிலைமைகளைக் கண்டறிவதற்காகச் சர்க்கார் கட்சித் தலைவர் எதிர்கட்சித் தலைவருடன் உதகை சென்றுள்ள செய்தி வந்திருக்கின்றது. உதகைக்குச் செல்வது எவ்வளவு அவசரமும் அவசியமுமானது என்று சர்க்காரும எதிர்க்கட்சியினரும கருதுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது அவர்களுடைய சுறுசுறுப்பு. அரண்மூர் அரண்மனையையும் வேறு பிறமாளிகைகளையும் அவர்கள் பார்வையிட்டிருக்கின்றனர். அதோடு பல ஓட்டல்களையும் பார்வையிட்டனராம். இன்ன இடத்தில் இதை மாற்றவேண்டும், அங்கே அதைத் திருத்த வேண்டும் என்று பல யோசனைகளைச் சொல்லியிருக்கின்றனர்.

சட்டமன்றம் கூடுகின்றபோது உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டியது பொறுப்புள்ள சர்க்காரின் கடமைதான். சர்க்காருடன் வர இருக்கும் அலுவலர்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்து தரவேண்டும்.

ஆக ஜனநாயகம் சுவையுள்ளதாகவும், கவர்ச்சியுள்ளதாகவும் இயங்க வேண்டுமானால் கொஞ்சம் செலவு செய்துதான் தீர வேண்டும். அதற்காக ஆளும் கட்சியினர் தயங்கமாட்டார்கள். சேரிஒழிப்பு, வீட்டுவசதி போன்ற 'முக்கியமற்ற' திட்டங்கள் என்றால் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் மிக்க தயக்கத்துடனும், சிக்கனத்துடனும் ஆமை வேகத்தில்தான் அந்தச் செயல்களில் ஈடுபடுவர் என்பது உண்மைதான். ஆனால் இதுவோ — 'எசமானர்களை மகிழ்விக்கும்' பிரச்சினை ஆயிற்றே! இதிலே அவர்கள் தங்கள் கவனம அனைத்தையும் செலுத்தி, தாராள மனத்துடன் எல்லா யோசனைகளையும் ஏற்றுக் கொண்டு, வேண்டிய மாற்றங்களைச் செய்வார்கள். சர்க்கார் இந்தப் பிரச்சினையிலே காட்டும் ஆர்வத்தையும் செயல்படும் விரைவையும் பார்த்தாலே உதகைக்குப் போவதில் அவர்கள் எவ்வளவு ஆவலோடு இருக்கிறார்கள் என்பது புலனாகும்.

இதைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் எதிர்க்கிறது; அதனால்தான அந்தப் 'பார்வைப் பயண'த்தில் நான் கலந்து கொள்ளவில்லை.

பத்திரிகைகளில் சர்க்கார் கட்சித்தலைவர் மற்றக்கட்சித் தலைவர்களுடன் உதகைக்கு வருவதாக வந்திருக்கும் செய்தியைச் சுட்டிக்காட்டி, நான் எப்போது அங்கே வருகின்றேன் என்பதை உதகையில் இருக்கும் நண்பர்கள் எழுதிக் கேட்டனர்.

ஆனால் சர்க்கார் கட்சித் தலைவருடன் செல்லும் அந்த 'அரிய' வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. உதகையில் மன்றம் கூடும் யோசனையை நான் ஆதரிக்காததுதான் இதற்கான காரணம்.

உதகை எனக்குப் பிடிக்காத ஊரல்ல. உதகையின் இயற்கை எழிலையும், உள்ளங்கவரும் சூழ்நிலையையும் அறிவேன்; பல முறை அநுபவித்தும் இருக்கின்றேன். அங்கே எனக்குப் பல நண்பர்களும் இருக்கின்றனர்.

ஆனாலும் உதகைக்குச் செல்வதை நான் எதிர்ப்பதற்குக் காரணம், நானாக மனதிலே எண்ணிக்கொண்ட கற்பனையல்ல. இந்த மாற்றம் அவசியமற்றதும் ஆடம்பரமுமானதென்று நான் உறுதியாக நம்புகின்றேன். வெள்ளைக்காரர்கள் தங்களுடைய 'மேன்மை'யைத் தெரிவிப்பதற்காகச் செய்த முடிவு என்று காங்கிரஸ்காரர்கள் இலட்சக் கணக்கான பேர்களை எண்ணச் செய்தனர். வெள்ளையர் கோடையின் கொடுமையினைத் தாங்க இயலாதவர்கள். சென்னையின அனல் காற்றில் கிடந்து தவித்தால் உடலும் மூளையும் பாதிக்கப்படும். "ஆகவே நாங்கள் குளிர்ச்சி மிக்கதோர் இடத்தை நாடிச் செல்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

இதே காங்கிரஸ் தலைவர்கள் தான் அன்று ஊர் ஊராகச் சென்று இந்த 'அக்ரமத்தை' 'ஊதாரித்தன'த்தை, 'திமிரை'க்

கண்டித்து வீர முழக்கம் செய்தனர்.

"இதோ இந்தப் பரங்கியரைப் பாருங்கள் — பாட்டாளி மக்களே, நெற்றி வியர்வை நிலத்தில் விழ நீங்கள் பாடுபடும் நேரத்தில் ஆயிரமாயிரம் வழிகளில் உங்களிடம் கொள்ளையடித்து அவர்கள் உதகைக்குச் செல்லுகின்றனர். சென்னையிலே தங்கினால் அவர்கள் ஒன்றும் வெப்பந்தாக்கிச் செத்துப்போக மாட்டார்கள். அப்படி அவர்களுக்குக் கோடை கொடுமைமிக்கதாக இருந்தால், இங்கே, இந்நாட்டில் ஏன் இருக்க வேண்டும்? சூரியனைப் பார்ப்பதிலேயே சுவைகாணும் அவர்களுடைய நாட்டுக்கு ஏன் போய்த் தொலையக்கூடாது? போங்கள் ஐயா, வெள்ளையர்களே போங்கள்! இந்த நாடு உங்களுக்கு ஏற்றதல்ல. இந்த நாட்டுக் கோடையே உங்களைக்கொல்லுகிறது! பனியும் சேறும் மிகுந்த உங்கள் நாட்டிற்குப் போங்கள்!" — இதைப்போல் வீரகர்ஜனை செய்யும் சத்தியமூர்த்தியின் குரல் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

"சென்னையிலே கோடையின் கொடுமை மிகுந்திருக்கும் என்பதற்காக உதகையிலே மன்றம் கூடவேண்டும் என்பது ஒரு வகையான அரசியல் அகம்பாவம். இதனை மக்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள்; சகித்துக் கொள்ள முடியாது; கூடாது. நம்முடைய மக்கள் எல்லோரும் இந்த வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு அங்கேயே இருக்கும் போது, யாரோசிலர் ஏன் இந்தக் கோடைக்குப் பயந்துகொண்டு மலை உச்சிக்கு ஓடவேண்டும்!"

என்ற இந்த அடிப்படை உண்மையை அன்று நமக்கு எடுத்துணர்த்தினர்.

ஏதோ வெள்ளைக்காரர்கள் உதகைக்குப் போனார்கள் என்றால், அதற்கு அவர்களுக்காவது ஒரு காரணம் இருந்தது — அவர்கள் குளிர்ந்த நாட்டிலிருந்து வந்தவர்கள். ஆனால் அவர்களைப் பார்த்துக் 'காப்பி' அடிக்கவேண்டும் என்பதற்காகச்--சிலருடைய ஆவலைத் தீர்க்கவேண்டும்- என்பதற்காக, இன்று பெருந்தொகை செலவிடுவதென்பது நியாயமற்றது; அர்த்தமற்றது.

இந்தப் 'பயணம்' முழுக்க முழுக்க சிலருடைய 'அற்ப ஆசை' என்பதே என்னுடைய உறுதியான எண்ணம். இதனால் உண்மையில் பெறும் பயன் ஒன்றும் இல்லை.

ஆனால் நாட்டின் நாயகர்களுக்கு இந்த உண்மையை எடுத்துச் சொல்லக்கொஞ்சம்கூச்சப்படுகின்றனர். கோடை கொடுமையாக இருக்கிறது. அதனால் குன்றின் உச்சிக்குப்போய்க் குளிர்ச்சி பெற வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை.

எந்த விஷயத்தையும் தடம் மாற்றிக்கொண்டு போவதில் அவர்கள் வல்லவர்கள் ஆயிற்றே! அதுதானே அவர்களுடைய பெரிய 'சொத்து'! அவர்கள் சொன்ன காரணமே வேறு. "மக்களே, நாங்களும் உதகைக்குப் போகிறோம். ஆனால் அது வெள்ளைக்காரர்கள் போனதைப்போல் என்று எண்ண வேண்டாம். தங்களுடைய உயர்வைக் காட்டிக் கொள்ள அவர்கள் போனார்கள். ஆனால் நாங்களோ ஒரு முக்கியமான குறிக்கோளோடு அங்கே போகிறோம். என்ன அந்தக் குறிக்கோள் என்கிறீர்களா? தலை தாழ்த்திச் சொல்கிறோம். நாங்கள் அங்கே செல்வதால் உதகையும் அதன் சுற்றுப்புறமும் முன்னேற்றமடையும். ஆகவே அந்தப் பகுதி மக்கள் வசதியும் வளமும் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் அங்கே போகின்றோம் — எங்களுக்கு இன்பம் கிடைக்கும் எனபதற்காக அல்ல என்றனர் நாடாள வந்துள்ளோர்.

இந்த யோசனை 'பொருள் ஆய்வுக் குழு'வில் கொண்டுவரப்பட்டபோதும் சரி, மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டபோதும் சரி திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் நான் இதனை வன்மையாகக் கண்டித்தேன். பொதுமக்களுடைய வெறுப்பு வந்து வாய்க்கும் என்று எடுத்துச்சொல்லி இந்த யோசனையைக் கைவிடச் செய்வதற்கே முயன்றேன்.

ஒருபோது இந்த யோசனையைக் கைவிட்டுவிட்டார்கள் என்றுகூட நான் எண்ணினேன்.

சர்க்கார் கட்சித் தலைவர் சட்ட மன்றத்தில் தம்முடைய அரிய முடிவை எடுத்துச் சொன்னார்: **எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொண்டால் அன்றி உதகைக்குப் போவதில் சர்க்காராக ஒன்றும் முடிவு எடுக்கப் போவதில்லை.** என்றார் அவர்.

ஆகவே இந்தப் பிரச்சினை மறுபடியும் எழுப்பப்பட்டபோது நான் வியப்படைந்தேன். ஆனால் 'கம்யூனிஸ்ட்' கட்சியினரும் இந்தப் பயணத்திற்கு ஒத்துக்கொண்டதைக்கேட்டு என் வியப்புத்திகைப்பாயிற்று! என்னுடைய கருத்தைக் கேட்டபோது நான் பழைய படியே ஒத்துக்கொள்ள மறுத்தேன். ஆனால் மற்ற எல்லோரும் சேர்ந்து என் மறுப்பையும் மீறி, போவது என்று முடிவெடுத்துவிட்டனர்.

பின்னர் சட்ட மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் உதகைப் பயணம் செல்கிறோம் என அறிவித்துவிட்டனர்.

இந்த அறிவிப்பைக் கேட்டுச் சபையில் யாரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவில்லை. மாறாக ஒரு வகையான அமைதிதான் இருந்தது. எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டாலன்றிப் பயணமாவதில்லை என்று முன்னால் திட்டவட்டமாக அமைச்சர் அறிவித்திருந்ததினால், அவர்கள் 'உதகைக்குச் செல்வது இல்லை' என்று எண்ணியிருந்திருக்கக்கூடும். அதனால் சொன்ன சொல்லை மதிக்க மறந்திட்ட சர்க்காரைப் பற்றி அவர்கள் வருந்தினார்களோ என்னவோ!

முன்னால் ஒருமுறை 'எல்லாரும் ஒத்துக்கொண்டாலன்றிப் போவதில்லை' என்று வீரம் பேசிவிட்டு இப்போது தி. மு. க. எதிர்த்தும் போவது என்று முடிவுகட்டுவது அழகல்ல. இத்துணை நாட்கள் 'சாது'வாக இருந்திருக்கத்தேவையில்லை. முதலிலேயே யாரையும் கேட்காமல் முடிவு செய்திருக்கலாம். ஒரு வேளை சில நாள் சென்றுவிட்டால் நான் எதிர்க்க மாட்டேன் என அவர்கள் கருதியிருக்கக்கூடும். அந்தச் சில நாட்களில் உதகையின் உல்லாசம்பற்றி எனக்கு எடுத்துச் சொல்லி மனதை மாற்றிவிடலாம் என்று கருதினார்களோ என்னவோ? அடிப்படை முடிவிலிருந்து உறுதி வாய்ந்த ஒருவனைத் திருப்பிட எந்தச் சக்தியாலும் முடியாது,

இந்தவிஷயத்தில் மாற்றமுடியாதி என் கருத்தினை என்னால் ஆன வரை எடுத்து விளக்கினேன்.

சட்டமன்றம் அங்கு செல்லுவ தால் உதகை முன்னேறும் என்று சொல்வது வெறும் ஏமாற்றுத் தான்.

உதகைக்கு வாழ்வளிக்க ஆயி ரம் வழிகள் இருக்கின்றன. ஓரிரு திங்கள் அங்கே சென்று தங்கு வது நிச்சயமாக அவற்றிலே ஒரு வழியன்று.

பத்திரிகைச் செய்திகளிலிருந்து எந்த வகையான முன்னேற்றம் காணுகின்றார்கள் என்பதை அறி கிறோம். பார்வைக் குழுவினர், அரண்மூர் அரண்மனையையும், உட்லண்ட்ஸ், தாசபிரகாஷ் ஹோட்டல்களையும் பார்த்துவிட்டு வந்தனர். அவற்றில் எத்துணை பேர் எவ்வளவு வசதிகளைப் பெற லாம் என்பதை அறிந்துவந்தனர். இதுதான் உதகை பெற இருக்கும் முன்னேற்றம்!

வெளிநாட்டு, உள்நாட்டு மக்கள் வந்துபோகும் வாய்ப்பையும் வசதி யையும் பெருக்குவதிலே நம் முடைய அரசாங்கம் கவனம் செலுத்துமாயின் உதகை உண் மையிலேயே வளரும்.

உதகையில் வாழ்க்கைச் செலவு கூடுதலாக இருக்கின்றதினால் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்லும்போது, தங்கள் படித் தொகையை இரட்டிக்கச் சொல்லு வார்கள்; மும்மடங்காகப் பெருக்க விரும்பினாலும் வியப்பில்லை.

உதகைக்குப் போனதும், நம் முடைய உறுப்பினர்கள் எல்லோ ரும்,—சர்தார் வேதரத்தினம் ஒரு வர் நீங்கலாக, கம்பளி, பிளானல் ஆடையுடன் காட்சி தருவர். உறுப்பினர்களும் அவர்களுடன் வருவோரும் உதகையின் அழகிய புல்வெளிகளையும், எழில் மிக்க மலர்களையும் கண்டுகளிப்பர். இது தான் நடக்குமே ஒழிய, உதகை உயர்வு பெறாது! உதகைக்கூட்டம் உறுப்பினர்களுக்கு உல்லாசம் தரும்; உதகைக்கு உதவாது!

உதகையில் ஓரிரு திங்கள் உறுப்பினர்கள் கூடுவதால் உதகை உயர்ந்துவிடாது. அங்கே ஒரு கச்சா பிலிம் தொழிற்சாலை துவங்கலாம், பிரயாணிகள் நிலைய மாக்கலாம், வேறு பல வழிகளில் வளர்ச்சிகளுக்கு முயற்சி செய்ய லாம்.

சட்டசபை உறுப்பினராக உள்ள ஒரு நண்பர் என்னிடத்தில் இன் னொரு யோசனையைச் சொன்னார். அவர் சொல்கிறார்: எப்போதும் சென்னையிலேயே கூடாமல் நாட் டின் பல பகுதிகளிலும் கூடினால் மக்கள் தொடர்பு ஏற்படும் என்று. அந்த வார்த்தையை ஒப் புக்கொள்ளுவதானால், ஏன் தஞ்சை யில் கூடக் கூடாது? அங்கே அதற்கேற்ற அரண்மனை இருக் கிறது. சோழர்களும் பாண்டியர் களும், அவர்களுக்குப் பின்னர் சரபோஜி மன்னர்களும் ஆண்டு அநுபவித்த அந்த இடத்தில் உள்ள அரண்மனையில் வேண்டிய மாற்றங்களைச் செய்து அங்கே கூடலாமே!

அங்கு வேண்டாமெனின் மதுரை யில் திருமலை நாயகர் மகால் இருக் கிறதே! மதுரை—வரலாறுமிக்க மதுரை—அங்கே ஒருமுறை உட் கார்ந்தாலாவது நமது உள்ளத் திலே பரம்பரைஉணர்ச்சி வருமே! குற்றாலம் அருவிகளின் மெல்லிய ஓசையை அருமருந்தாகக் கொண்டு அங்கே சில நாட்கள் மன்றத்தைக் கூட்டலாமே!!

இல்லை. நாடெங்கும் சென்று தொடர்புகொள்ளவேண்டும் என் பதல்ல அவர்கள் நோக்கம். வெள்ளையர் அங்கே 'தர்பார்' நடத்தினர் நாம் ஏன் நடத்தக்கூடாது?—அது ஒன்றேதான் அவர்கள் நினைப்பு. அந்தக் கெடுமதிக்குத் தி. மு. க. துணைவர மறுக் கிறது.

எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொண்டால் அன்றி இப்போது அந்த முடிவை மாற்றிக்கொண் டதிலிருந்து உதகைக் கூட்டம் இல்லை என்று அறிவித்துவிட்டு, சர்க்கார் கட்சி ஒன்றைத் தெளி வாக்கியுள்ளது. மக்கள் ஏன் என்று கேட்காமல், எதையும் ஏற்றுக்கொள்ளும் வாய்மூடிக ளாக இருக்குமவரையில் ஆட்சி யாளர்கள் ஆணவம் கொண்ட வர்களாகத்தான் இருப்பார்கள் என்பதை இந்தப் பிடிவாதம் காட்டுகின்றது.

மற்றக் கட்சிகள் — குறிப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த ஆடம்பரத்திட்டத்திற்கு அநுமதி தந்திருக்கின்றனவே என்பது தான் என் வருத்தமெல்லாம்.

உதகையில் மன்றம் கூடவேண் டும் என்று எடுத்திருக்கும் முடிவு ஏதோ தவறி நடந்ததன்று. திட்ட மிட்டுச் செய்த வேலையாகும்.

வெள்ளையர் காலத்தில் 'அதிகாரத் திமிர்' என்று எதை இவர்களே வருணித்தார்களோ, அதையே இன்று இவர்களே வேறுபெயரில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். முன்னால் அந்நியன் காலத்தில் சொன்ன ஆடம்பரம், தர்பார், அத்தனையும் இவர்களால் கைவிடப்படாமல்போற்றி வளர்க் கப்படுகின்றன.

'ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்ட்' என்ற தேசிய நாளிதழின் தலையங் கத்தில் ஒரு பகுதி:—

> "கவர்னர்களுக்கும், வைஸ்ராய் களுக்கும் இரத்னகம்பளங்களுக்கும் மெய்க்காவலர்களுக்கும், பாண்டு வாத்தியத்திற்கும், வேறுபல ஆடம் பரங்களுக்குமான செலவினங்களை எதிர்த்தே முன்னாலெல்லாம் காங் கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து இருக்கின்றனர். இன் றைய தினம் அவற்றையெல்லாம் 'ஆடம்பரம் என்று நாங்கள் வெறுக்கவில்லை; அந்த ஆடம்பரங் கள், வெள்ளையர்களுக்கு மட்டுமே கிடைத்தனவே' என்பதற்காகத் தான் எதிர்த்தோம் என்பதைக் கேட்க நமக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. ஒருகாலத்தில் எதை ஆடம்பரம் என்று கண்டித்தார் களோ, அதனை இன்று அந்தஸ்து என்ற பெயரால் நிலைநிறுத்தப் பார்ப்பது காந்தியடிகளின் வாரிசு களுக்கு அழகல்ல."

ஆனால் தேசியமாக இருந்தாலும் சரி, இல்லாமற்போனாலும்சரி இன்று ஆளவந்திருப்போர் எதையும் காதுகொடுத்துக் கேட்பதாக இல்லை. முன்னதாக ஒரு முடிவு செய்துவிட்டுப் பின் னர் 'என்ன செய்யலாம்' என்று எதிர்ப்பட்டோரைக் கேட்கின் றனர். எதிர்ப்புத் தெரிவித்தால் அதை ஏற்றெடுத்தும் பார்ப்ப தில்லை. அவர்கள் இப்போது அவ்வளவு உயரத்தில் ஏறி நிற் கின்றனர். அதனால் அவர்களு டைய போக்கைக் கண்டு நான வியப்படையவில்லை. ஆனால் இது போன்ற செயல்களினால் அவர் கள் நிலை புலனாகின்றதே என்று தான் நான் அமைதியடைகிறேன்.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி ஏன் இந்தத் திட்டத்திற்கு ஒத்துக் கொண்டது என்பதுதான் எனக் குப் புரியாத புதிராக இருக்கிறது.

மக்கள்தான் முடிவு சொல்ல வேண்டும். ✽

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்து வாழ உரிமை படைத்த நாம், ஓட்டு என்ற பெருமைபடைத்த ஆயுதத்தைக் கையில்வைத்துக்கொண்டு, :இப்படி ஏமாற்றுவதை விட இழுக்கு வேறு என்ன வேண்டும்?

பக்கத்து வீட்டில்தானே திருட்டு நடந்திருக்கிறது—என்று அடுத்த வீட்டுக்காரன் அலட்சியமாக இருந்துவிட்டால்—அடுத்து, அவன் வீட்டிலும் திருட்டு நடக்காது என்பது என்ன நிச்சயம்? பாதுகாப்பு நிலையம்வரை சென்று பக்கத்து வீட்டுத் திருட்டுக்காக முறையிட மனமில்லாவிட்டினும் கூட—தன் வீட்டு வரை பாதுகாப்பை வலுப்படுத்தினால்—அது அவருக்கு மட்டுமல்ல — அதைப் பார்த்து அடுத்தவர்களும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கும் அரண் அமைப்பதன் மூலம், அனைவருக்குமே நன்மை ஏற்பட முடியும். இதே முறைதான் அரசியலுக்கும் பொருந்தும்! அரசியல் புரட்டர்களை விரட்ட, நேர்மையான இயக்கங்களில் பங்குகொண்டு உழைத்திட மனம் —வசதி — இல்லாவிட்டால் கூட —அரசியலில் நல்லது—கெட்டது —எது எது என்று தெரிந்து வைத்துக்கொண்டால் — அது நாட்டுக்கே செய்கின்ற பெரிய நன்மையாகும்!

தேர்தல் காலங்களிலெல்லாம், ஒரு சில இடங்களில் சாதி பேசப்பட்டதும், அது தொடர்ந்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் — அங்குள்ள மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்படாததுதான்! யார் ஆண்டால் என்ன?—என்ற சோம்பேறி எண்ணங்களுக்கு அடிமையாகி விடுவதுதான காரணம்! இப்படி ஏற்படுகிற அலட்சிய எண்ணம் —ஒருசில அரசியல் சூதாடிகளின் மயக்கமுறும் சாதியசொற்களுக்கு இணங்குகின்ற மக்களை வளர்த்து —அந்த வளர்ச்சி மக்களை மிருகத்தனத்தின் எல்லையில் நிறுத்தி—உருவாகிவரும் நமது திராவிடத்தின் ஒற்றுமைச் சக்தியைக் குலைக்கிறது! அரசியலைத் தெரிந்துகொள்ளவேண்டாம் என்பவர்கள் —இந்த அராஜகங்கள் நிகழும் நிலை கண்டாவது விழிக்க வேண்டும்!!

"தோட்டத்தை ஏற்படுத்தி பலன் தரும் பயிர்களை அதில் உருவாக்கிவிட்டு, நமக்கென்ன வந்தது என்று அலட்சியம் காட்டினால், பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கும் எருது—பசுமை கொண்ட அந்தத் தோட்டத்திலும் பதம்பார்க்காமல் விடுமா? அதன்விளைவு தோட்டம்--புழுதிக் கோட்டம் ஆகிவிடுமே!! வரி வரி என்று கொட்டிக்கொடுத்துவிட்டு வளமையைக் கட்டிக்கொள்ள முடியாமல்—வறுமையை இன்னும் அளந்துகொண்டிருக்கிறோமே! இதற்குக் காரணம்என்ன? அலட்சிய மனப்போக்குடையவர்கள்; நாட்டுக்குழைப்பவர்களையெல்லாம் "வேலையற்றதுகள்" என்று பேசித் திரியும் புத்திசாலிகள்—சிந்திக்கவேண்டும்!!

ஜனநாயகத்தைப்பற்றி வகை வகையான விளக்கங்களும், அந்த விளக்கங்களுக்கேற்ற விரிந்த செயல் இங்கு நடப்பதாக வெளியுலகிற்கு வாய்பறைசாற்றிக் கொண்டிருக்கும் எண்ணற்றோரைப்பெற்றிருக்கும் இந்தநாட்டில், மக்களின் புனிதமான வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள்--தடியைக் காட்டி--அதிகாரத்தைக் காட்டி!! புனிதமாக நடக்க வேண்டிய நிகழ்ச்சி — இழிவு நிறைந்த வகையில் நடத்தப்படுகிறது! இதற்குப் பெயர் ஜனநாயகம்! நேர்மைக்கும் நீதிக்கும் தாயாக விளங்குகின்ற ஜனநாயகம் இங்கு கொலைசெய்யப்படுகிறது! காரணம் என்ன? இதைச் சிந்திக்கமாட்டார்கள்.

இப்படியெல்லாம் இருக்கின்ற காரணத்தால்தான், பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் வடநாட்டு அகதிகளுக்குக் கோடிக் கணக்கில் கொட்டிக்கொடுக்கும் நேரு பண்டிதர்—அவதிப்படும் இலங்கை மக்களின் அவலநிலையைக் கண்டபிறகும், அவதியைப் போக்குங்கள் என்று கேட்டால்-நமக்குச் சம்பந்தமில்லாதது என்கிறார்!!—உலகத்தில் எந்த மூலையில் நீதியைக் கொல்லும் துட்டத்தனங்கள் நடந்தாலும் —அதற்கு — ஆர்பாட்டமாக குரலெழுப்பும் நேருவின் காதுகளில் தமிழனின் அவலக் குரல் ஏறவில்லை! ஏற்றிய பின்னரும் இடர் துடைக்கும் எண்ணம் வரவில்லை! அத்துடன் விட்டாரா? இலங்கையில் இன்னல் அடைந்த தமிழரை-"நாடற்றவர்கள்"என்று கூறிவிட்டார்! இலங்கைத் தமிழர்களை இன்று இவ்விதம் கூறியவர் — மலேயாவிலும், பர்மாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் வாழும் தமிழர்களையும் இப்படிக் கூறமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

எத்தனை இன்னல்கள் இழைக்கப்பட்டாலும், ஏன் என்று கேட்க மாட்டார்கள் நமது அமைச்சர்கள்! "வரி வரி என்று எத்தனை போட்டாலும் மக்கள் எங்களைத்தான் ஆதரிக்கிறார்கள்" என்று வரட்டுப் பெருமை பேசிப் பவனி வரும் நமது அமைச்சர் பெருமக்கள், தங்களின் டெல்லி எஜமானர்களுக்கு — தலைவணங்கித் தாள் பணிவார்களேயன்றி—நமது வேதனை கண்டு விழித்தெழுந்து பணியாற்றமாட்டார்கள்!

ஆகவே, இத்தகைய சூழ்நிலைகளை உடைத்தெறிந்து அனைவருமே நல்வாழ்வு வாழவேண்டுமானால், அரசியலை — சமுதாய அமைப்பை—எல்லோருமே நிச்சயம் தெரிந்திருக்கவேண்டும். அரசியலில் ஈடுபாடுள்ள இயக்கங்களின் கொள்கைகள்—செயல்கள் —இவைகளில், எது நேர்மை — நியாயம் என்பதையெல்லாம் தெரிந்திருக்கவேண்டியது மிக்க அவசியம். இதற்கெல்லாம் அடிப்படையாக, நாட்டில் விழிப்புணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் எல்லோரிடத்திலும் ஏற்பட்டுவிட்டால் — பின் — சுயநலக்காரர்கள் அனைவருமே செல்லாக் காசாகிவிடுவர்! அப்போது நாடு அரசியல் கண்ணியவான்களைக் கொண்டதாகத் திகழும்! ஏமாற்றுக்காரர்களின் கைப்பாவைகளாய் மக்களை மாற்றிவிடமுடியாது என்பது திண்ணம்!!

வருந்துகிறோம்

கவிஞர் கண்ணதாசனின் வளர்ப்புத் தாயார் திருமதி சிகப்பிஆச்சி அவர்கள் 25-ந் தேதி அன்று காலை காரைக்குடியிலுள்ள தனது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்கிற சேதி கேட்டு, மிகமிக வருந்துகிறோம். நண்பருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சிபுரம், 9, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.